# விடுதலைப்புலிகள்

குரல் - 48 | சித்திரை - 1994 | அன்பளிப்பு: ரூபா 5/-


# பெரும் போருக்கு அரசு தயார்

## போரில் வென்று, தேர்தலை வெல்வது விஜேதுங்காவின் நோக்கம்

**வ**டபுலம் மீது பெரும்படையெடுப்பு ஒன்றிற்கான பகிரங்கப் போர்ப் பிரகடனத்தை சிங்கள உயர்தளபதிகள் ஒளிவுமறைவு இன்றிப் பறைசாற்றி வருகின்றனர். இப் படைநகர்த்தலின்போது, சிங்கள அரசு தனது படைபலத்தின் பெரும்பகுதியை ஒருங்கு திரட்டிப் பயன்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை வடபுலத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் அரசபடைகள் 'மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள்' சிலவற்றையும் நடாத்திவருகின்றன. இவை, ஆரம்பமாக இருக்கும் பெரும் படையெடுப்புக்குக் கட்டியம் கூறுவதுடன், அதற்கு ஒத்திகை பார்ப்பதாகவும் அமைகின்றன.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, விஜேதுங்கா அரசை சமாதானப் பேச்சுக்களுக்காக நெருக்கிவந்த சர்வதேச உலகமும் இப்போது மௌனம் சாதிக்கின்றது. அதேவேளை ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற மேலைநாடுகள் தத்தம் நாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழர்களைத் திருப்பியனுப்பும் நோக்கத்துடன், ''இலங்கையில்சகஜ நிலைமை உள்ளது'' என்ற கருத்துப்பட வெளியிட்ட அறிக்கைகள், போர்வெறியுடன் இருக்கும் விஜேதுங்கா அரசுக்கு புதிய தெம்பைக் கொடுத்துள்ளன. ஆனால் சமாதானம் வேண்டிநின்ற தமிழீழ மக்களுக்கு, இது பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.


அரசின் சமாதான தூதர்களை ஆவலோடு எதிபார்த்திருந்த எமது மக்களுக்கு குண்டுவீச்சு விமானங்களின் குத்திப்பதியும் ஓசையும், படைத் தயாரிப்பு வேலைகளில் ஈடுபடும் இராட்சத விமானங்களினது இரைச்சல்களும்தான் பதிலாகக் கிடைத்துள்ளன.

இவ்விதம் அமைதி முயற்சிக்கு எதிராக அரசு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தாலும், தார்மீக அடிப்படையில் அரசியல் நியாயத்தின் அடிப்படையில் தமிழீழமக்களின் பக்கத்தில்தான் நீதி உண்டு என்ற அசையாத நம்பிக்கை தமிழீழ மக்களிடம் இருக்கின்றது. இந்த நம்பிக்கைஎதிரிப்படையைப் போரில் சந்திக்கும் மனவலுவையும் அவர்களுக்கு ஊட்டுகின்றது.

போர்மூலம் ஒரு இராணுவ வெற்றியைப் பெற்று, அதன்மூலம் சிங்கள மக்களது மனங்களைக் கவர்ந்து, ஜனாதிபதித் தேர்தலை வெல்வதே விஜேதுங்கா அரசின் மூலோபாயம் (Strategy). வடபுலம்மீது அதிலும் குறிப்பாக குடாநாடுமீது ஒரு படையெடுப்புக்குப் படைகள் தயாராகிவருகின்றன என்பது, உலகம் அறிந்த செய்தி. ஆனால் ஆளுங்கட்சிக்குள் எழுந்துள்ள உட்பூசல்களிலிருந்து தப்பக்கொள்வதற்காக, படையெடுப்பை விரைவுபடுத்துவதில் இப்போது விஜேதுங்கா அக்கறை காட்டுகின்றார்.

அதாவது, படையெடுப்பு தொடங்கி விட்டால் சிங்களதேசத்தின் கவனம் முழுவதும் போர் நிகழ்வுகள்மீது திரும்பிவிடும்; அந்தநேரத்தில் கட்சிக்குள் களையெடுப்புக்களையும், நாற்றுநடுகைகளையும் சுலபமாகச் செய்துவிட முடியும் என்று, விஜேதுங்கா கருதுகின்றார்.

நடைபெற இருக்கும் படையெடுப்பு ஒரு குறித்த பகுதிமீது பெரியளவில் நடைபெறுமா? அல்லது பலமுனைகளூடாக வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளாக அமையுமா? என்பதே, இன்றுள்ள கேள்வி. ○



பேராசானுக்கு விருதுசூட்டி மகிழும் பெருந்தலைவன்

"தேசப்பற்றோடும், மக்கள் நேயத்தோடும் மண்ணுக்கு அவர் மகத்தான சேவை ஆற்றினார்."

## உள்ளே


* சமாதானம் ஏன் பிறக்கவில்லை?
  - கருத்து
* பெரும் படைக்கலக் கொள்வனவு
  - நிலவரம்
* கல்வியும் புலிகளும்; தலைவர் அறிக்கை
  - விளக்கம்
* மலரும் உறவும் பிறக்கும் அச்சமும்
  - நிலைப்பாடு
* லெப்ரினன்ற் கேணல் நவநீதன்
  - போராளியின் குருதிச் சுவடுகள்
* எளிமையும், இனிமையும் கலந்த மனிதர்
  - பேராசிரியர் துரைராசாவுக்கு தலைவர் புகழாரம்
* இது போராடும் பூமி; புலிகளின் காலம்
  - கவியுரை



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

# மலரும் உறவும் பிறக்கும் அச்சமும்

பனிப்போர் முடிவடைந்ததால் எழுந்த புதிய சூழலில், புதிய உறவுகளை அமைத்துக்கொண்டு பொருளாதார முன்னேற்றத்தை அடையக் கனவுகண்ட இந்திய இராஜதந்திரிகளை, மீண்டும் இராணுவ அச்சுறுத்தல் பீடித்துவிட்டது.

சோவியத் ஒன்றியத்தின் சிதைவுக்குப் பின்னர் மெதுமெதுவாக நெருங்கி வந்த அமெரிக்க வல்லரசு, திடீரென இந்திய நலனுக்கெதிராகப் பேசவும் – செயற்படவும் தலைப்பட்டுவிட்டது. இது இந்திய ஆட்சியாளர்களுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

ஒருபுறத்தில், காஷ்மீரில் இந்தியப் படைகள் புரிந்த மனித உரிமைமீறல்களைக் கடுமையாகக் கண்டித்த அமெரிக்க நிருவாகம், மறுபுறத்தில் பாகிஸ்தானுக்கு நவீன போர்விமானங்களை வழங்க முடிவு செய்துள்ளது. F 16 எனப்படும் அதிநவீன போர்விமானங்களில் 40 விமானங்களை, பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து பெறவிருக்கின்றது. சக்தி வாய்ந்த இப்போர்விமானங்கள், பாகிஸ்தானின் வான்பலத்தை ஒரு உயர்நிலைக்குக் கொண்டுசெல்ல உதவும் என்பது உறுதி. இன்னும் வெளிப்படையாகச் சொன்னால், பாகிஸ்தானிடம் F 16 போர் விமானங்கள் வந்துசேர்ந்தபின், இந்தியாவிலுள்ள அணு உலைகள் பாகிஸ்தானின் இலகுவான இராணுவ இலக்குகளாக மாறிவிடும் என்பது உண்மை. இது இந்தியாவின் பாதுகாப்புக்கும் அதன் ஸ்திர நிலைக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பதுடன், தேவை ஏற்பட்டால் பலத்தைப் பயன்படுத்திப் பாகிஸ்தானைப் பணிய வைத்துவிடலாம் என்ற இந்தியாவின் எண்ணத்துக்கும் மண்ணள்ளிப் போடலாம்.

இதேவேளை, சிறீலங்கா ஆட்சியாளர்களின் தீவிர சீனசார்பு நிலைப்பாடு இந்தியாவிற்கு மேலும் தலைவலியைக் கொடுத்துள்ளது. ஒருகாலத்தில் இந்திய எதிர்ப்புவாதியாகத் திகழ்ந்த திரு. பிரேமதாசா, தனது இறுதிக்காலத்தை இந்தியாவுடனான நல்லுறவுகளைப் பலப்படுத்துவதிலேயே கழித்தார். அடிக்கடி இந்திய மண்ணுக்குச் சென்றுவந்த அவர், இந்திய ஆட்சியாளர்களது மனதில் பால் வார்த்தார். ஆனால் பிரேமதாசா கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த திரு. டி. பி. விஜேதுங்கா, இந்தியாவுடனான உறவுகளைக் கருத்திலெடுக்காது சீனாவுடனான உறவுக்கே முக்கியத்துவம் கொடுத்துவருகின்றார். சீனப் பிரதிப் பிரதமரின் அண்மைய கொழும்பு விஜயம், சீன – சிறீலங்கா உறவின் இறுக்கத்தைத் தெளிவாகக் காட்டியது. இதன் உச்சக்கட்டமாக, சீனப்பயணம் ஒன்றுக்கான ஆயத்தங்களை சிறீலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா செய்துவருகின்றார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சீனாவின் பாரிய ஆயுதக்கிடங்காக சிறீலங்கா மாறிவருவது இந்தியாவுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது.

பாகிஸ்தானில் அமெரிக்க ஆயுதங்கள் குவிவதும் சிறீலங்காவில் சீன ஆயுதங்கள் குவிவதும் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலைக் கொடுத்துள்ளதாக, இந்தியா பகிரங்கமாகக் குற்றம்சாட்டியுள்ளது.

கடந்தகாலங்களிலே பாகிஸ்தானுடன் மூன்றுமுறை போரில் ஈடுபட்டுள்ள இந்தியா, சீனாவுடன் ஒருமுறை போரில் ஈடுபட்டது. இந்த இரு நாடுகளுடனும் இந்தியா போர் செய்தபோதெல்லாம் சிறீலங்கா அரசு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவேதான் சீன ஆயுதங்கள் சிறீலங்காவில் குவிவதை ஒரு அச்சுறுத்தலாக இந்தியா பார்க்கின்றது.

இதேவேளை இந்தியாவைச் சுற்றி ஒரு சீனச் செல்வாக்கு வலையம் மெதுவாகவும் – உறுதியாகவும் உருவாகி வருவதை, இந்தியாவும் உணர்ந்துகொண்டுள்ளது. பர்மா, பங்களாதேஷ், தீபெத், நேபாளம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் என்று இந்திய உபகண்டத்தின் மேற்கு, வட – கிழக்கு எல்லைகள் ஏற்கெனவே சீனச் செல்வாக்கால் சூழப்பட்டுவிட்டன. எஞ்சியிருந்த தெற்குமுனையும் (சிறீலங்கா) இந்தியாவின் எதிர்பார்ப்பிற்குப் புறம்பாக சீனத்தின் மடியில் விழுந்து, இந்தியக் கொள்கைவகுப்பாளர்களுக்குத் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இதன் விளைவுகளில் சிலவற்றை இந்திய ஆளும்வர்க்கத்திடம் காணக்கூடியதாக உள்ளது. தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான டி. பி. விஜேதுங்காவின் அணுகுமுறை சில இந்தியப் பத்திரிகைகளின் கண்டனத்துக்கு உள்ளாகியிருப்பதும், தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக அண்மையில் திரு. டிக்சிற் தெரிவித்த கருத்தும், சீன – சிறீலங்கா உறவுகளின் நெருக்கத்தால் இந்தியத் தரப்பில் பிறந்த ஞானமாகவே கொள்ளப்படவேண்டும்.

புலிகள் இயக்கம் திரும்பத்திரும்பக் கூறிவந்துள்ளதைப்போல, தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஒரேயொரு நட்புசக்தியாக இருக்கக்கூடியவர்கள் ஈழத்தமிழர்கள்தான். ஆனால் இதை இந்தியா எனறு உணருமோ தெரியவில்லை. ○

# மட்டக்களப்பில் எஸ். ரி. எவ். ஆதிக்கம்:

## மனித உரிமைவாதிகள் கவலை

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டம் மீதான அரசின் கட்டுப்பாடு, இராணுவத்திற்குப் பதிலாக எஸ். ரி. எவ். எனப்படும் விசேட அதிரடிப்படையிடம் போய்ச்சேரத் தொடங்கியுள்ளது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை, பழுகாமம், போரதீவு, அம்பிலாந்துறை ஆகிய இடங்களில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. ஏப்ரில் 18 ஆம் திகதி இந்த நான்கு முகாங்களிலிருந்தும் இராணுவம் வெளியேறியது. அதற்குப் பதிலாக இந்த நான்கு முகாங்களிலும் போய் நிலைகொண்ட எஸ். ரி. எவ். இப்பகுதியில், மேலும் இரு முகாம்களை அமைத்துத் தனது ஆதிக்கத்தை விஸ்தரித்துள்ளது.

மட்டு - அம்பாறை மாவட்ட மக்களைப் பொறுத்தளவில், இராணுவம் என்ற சொல்லைவிட எஸ். ரி. எவ். என்ற சொல்லைக் கேட்டே அவர்கள் அதிகம் மிரளுவர். அந்தளவுக்கு கடந்தகாலத்தில் எஸ். ரி. எவ். தனது பயங்கரவாத நடவடிக்கைகளை அந்த மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டிருந்தது.

பொலிஸ்துறையில் உள்ளதைப் போன்று பதவிநிலைகளை உடைய இந்தக் கொலைகார அமைப்பு, 1985 - 1987 ஆம் ஆண்டுப் பகுதிகளில் மட்டு-அம்பாறைத் தமிழ் மக்களுக்குச் செய்த கொடூரம், கேட்போரின் இரத்தத்தை உறைய வைக்கக்கூடியது. முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா தலைமையின்கீழ் இயங்கிய இந்த விசேடபடை, சித்திரவதைக்கும் - படுகொலைகளுக்கும் - பாலியல்வன்முறைகளுக்கும் - பொருளாதார அழிப்புக்களுக்கும் நன்குபெயர்போனது. மட்டக்களப்பு பிராந்தியத்தில் நடைபெற்ற தமிழின அழிப்பில் எஸ். ரி. எவ். இன் பங்கு மிகப்பெரியதாகும்.

பொலித்தீன்களை -றெஜிஃபோம்களை உருக்கி தோலில் ஊற்றுவது, ஆண்குறிக்குள் உலோகக் கம்பிகளைச் சொருகுதல், காளை மாடுகளுக்குச் செய்யப்படுவதுபோல விதைகளை நசித்து - சேதமாக்குவது, விசாரணைகளின்போது அங்கங்களை வெட்டுவது - நெருப்பால் சுடுவது, நீரில் அமிழ்த்தி சித்திரவதை செய்வது என்பன எஸ். ரி. எவ். செய்த - செய்துவரும் சில சித்திரவதை வடிவங்கள். இதேபோல, குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையிலேயே அவர்களில் ஒருவரை படுகொலைசெய்வது அல்லது பாலியல்வன்முறைக்கு உட்படுத்துவது, மற்றும் தலைகளைத் துண்டிப்பது, விளைநிலங்களைப் பருவம் பார்த்து அழிப்பது ஆகியன எஸ். ரி. எவ். செய்யும் சில பயங்கரவாத வடிவங்களாகும். சுருக்கமாகச் சொன்னால், பயங்கரவாத அணுகுமுறைகள்மூலம் தமிழ் மக்களது போராட்ட உறுதியை உடைப்பது என்பது, எஸ். ரி. எவ். கடைப்பிடிக்கும் சித்தாந்தமாகும்.

ஜெயவர்த்தனா காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த விசேடபடை, பிரேமதாசா காலத்திலும் சக்திவாய்ந்தஒன்றாகவேஇருந்தது. குறிப்பாக 1988 - 89 ஆம் ஆண்டுகளில் தென்பகுதியில் நிகழ்ந்த ஜே. வி. பி. கிளர்ச்சியை ஒடுக்குவது என்ற போர்வையில் செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களது படுகொலையில், இந்த விசேடபடை பெரும் பங்கு கொண்டிருந்தது. அத்துடன் பிரேமதாசா அரசின் காலத்தில் அவரது அரசிலுள்ள பெரும்புள்ளிகளது பாதுகாப்புப்பொறுப்பும் எஸ். ரி. எவ். இடமே ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாக படுகொலைகளுக்கும் - சித்திரவதைகளுக்கும் பெயர் பெற்றிருந்த எஸ். ரி. எவ். மீண்டும் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் அதன் செயற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளதானது, அப்பகுதியில்வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் அச்சத்தை ஊட்டியுள்ளது.

மட்டு - அம்பாறைப் பகுதிகளில் இருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்படும் இதேவேளை, எஸ். ரி. எவ்வுடன் இணைந்து சிங்கள காவல்துறையும் காவல் நிலையங்களை அமைக்கத் தீர்மானித்துள்ளது. மிகவிரைவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிகமாக மூன்று அல்லது நான்கு காவல் நிலையங்களை பொலிஸ்துறை அமைக்க இருக்கின்றது. இதற்குரிய ஆட்பலத்தைப் பெறும் முகமாக, தென்பகுதியிலிருந்து அதிகளவு பொலிசார் கிழக்கு மாகாணத்துக்கு கொண்டுசெல்லப்படுகின்றனர் என்று, கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. அதே காரணத்திற்காக எஸ். ரி. எவ்வினது ஆட்பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக, அந்தச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மட்டு - அம்பாறை மாவட்டங்களின் அதிகாரம் எஸ். ரி. எவ்வினது கைகளுக்குள் சென்றுகொண்டிருப்பதை, சில மனித உரிமைவாதிகள் கவலையுடன் நோக்குகின்றனர்; வருங்காலத்தில் அப்பகுதியில் மனித உரிமை மீறல்கள் பெருமளவுக்கு அதிகரிக்கலாம் என, அச்சம் தெரிவிக்கின்றனர். இலங்கைத் தீவின் மனித உரிமைகள் சரித்திரத்தில் எஸ். ரி. எவ். என்பது வெறுப்புக்கும் கண்டனத்திற்குமுரிய பெயராகவே விளங்கிவருகின்றது. ○

# பெருமெடுப்பிலான படைக்கலக் கொள்வனவு.


## பெரும் போருக்காகச் செய்யப்படும் முன்னேற்பாடுகள்

படைத்துறையின் உயர்மட்டக் குழுவொன்று சிங்களப் படைகளுக்குத் தேவையான போராயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரஷ்யா, சீனா, இஸ்ரேல், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளதாக, பாதுகாப்பு அமைச்சகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

டாங்கிகள் - கவசவாகனங்கள் மறறும கடற்படைப் போர்க்கலங்கள் இந்த ஆயுதக் கொள்வனவில் பிரதான இடத்தை வகிததுள்ளன. இதிலும் கடற்படைக்குத் தேவையான போராயுதங்களைக் கொள்வலவு செய்வதிலேயே பாதுகாப்பு அமைச்சு அதிக அக்கறை காட்டியுள்ளது. கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவுக்கெனச் சீனா சென்ற குழு. அதன் பிரதம தளபதியான வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகரவின் தலைமையிலேயே சென்றமை குறிப்பிடத்தககது. கடற்படைக்குத் தேவையான போராயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு மட்டும் 100 கோடிரூபாவுக்கும் மேல் பணம் ஒதுக்கப்பட்டிருந்ததாக 'ஐலண்ட்' (ஏப்ரில்8) பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இந்தப் பணத்தில் நான்கு சக்திவாய்ந்த போர்க்கலங்களின் கொள்வனவும் அடங்கியுள்ளது (போர்க்கபல் ஒன்று, பீரங்கிப் படகுகள் இரண்டு, தரையிறக்கும் கலம் ஒன்று) இதுதவிர, இஸ்ரேலின் உதவியுடன் கொழும்பில்வைத்து விசைப்படகுகள் கட்டும் திட்டம் ஒன்றிலும் பாதுகாப்பு அமைச்சு உடன்பாடுகண்டுள்ளது. இந்த உடன்பாட்டின்படி, நான்கு விசைப் படகுகள் உடனடியாகக்கட்டப்பட இருக்கின்றன இந்தவகை விசைப் படகு ஒன்றுக்கான செலவு ஒரு கோடியே அறுபது இலட்சம் என, கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்தவகையில் சுமார் ஏழுகோடி ரூபா செலவில் நான்கு விசைப்படகுகளையும் விரைவில் கட்டிமுடிக்கப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதவிர ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ள குழுக்கள், தரைப்படைக்குத் தேவையான போர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளன.

முன்னாள் செக்கோசிலவாக்கியாவிலிருந்து வாங்கப்பட்டிருந்த T 55 ரக டாங்கிகள் இரண்டை, 'யாழ்தேவி இராணுவ நடவடிக்கை' யின்போது சிங்களப்படை இழந்ததை வைத்துக்கொண்டு, அந்த டாங்கிகள் போருக்குச் சிறந்தவை அல்ல என்ற ஒரு மனநிலை படையினரிடையே உருவாகியுள்ளது. இந்த T 55 மீதுள்ள அவநம்பிக்கையைப் போக்கி படையினர்க்குப் புத்துணர்ச்சி அளிக்கும் நோக்குடனும் - படைபலத்தை அதிகரிக்கும் நோக்குடனும், B. M. P. எனப்படும் ரஷ்ய தயாரிப்பான 100 டாங்கிகளைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பமைச்சகம் முயன்றுவருவதாக செய்திகள் '[ஐலண்ட்'- ஏப்ரில் 10] தெரிவித்துள்ளன. ஆனால் T 55 டாங்கிகளை விட B.M .P. ரக டாங்கிகள் எந்தவிதத்திலும் சிறந்தவையல்ல. T 55 ரக டாங்கிகளை பிரதான சமர் டாங்கிகள்(Main Battle Tank) என்றே அழைப்பர். B. M. P ரக டாங்கிகள் துருப்புக்களை ஏற்றிச்செல்லும் கவசவாகனமாகவே பயன்படுத்தப்படக்கூடியவை. ஒரு தடவையில் 11 பேர் இதில் பயணம் செய்யமுடியும். இதில் மூவர் டாங்கி இயக்குநர்களாக இருப்பர். அதே



**B. M. P.** டாங்கி: புத்தூக்கமா? போலி நம்பிக்கையா?

வேளை B. M. P. டாங்கிகள் சிறந்த கவசத்தடுப்பைக் கொண்டதுமல்ல. சாதாரண ரக சுரிகுழல் துப்பாக்கிச் சூடுகளையும் - எறிகணைச் சிதறல்களையும் தாங்கக்கூடிய B. M. P. இன் பக்கவாட்டுக் கவசத்தடுப்பானது, 50 கலிபர் துப்பாக்கிச் சூடுகளுக்கு ஈடுகொடுக்கமாட்டாது. அத்துடன் B. M. P. இற்கு மேலே பொருத்தப்பட்டுள்ள இயந்திரத் துப்பாக்கியைப் பயன்படுத்தி, டாங்கி ஓடிக்கொண்டிருக்கும்போது குறிபார்த்துச் சுடமுடியாது (ஆனால் T55 இல் அவ்வித வசதியுண்டு). இவ்விதம் ஒரு பலவீனமான டாங்கியைக் கொள்வனவுசெய்து சாதாரண சிப்பாய்களுக்கு போலிநம்பிக்கையூட்டவும், சிங்கள மக்களுக்கு 'வெள்ளி' காட்டவும் பாதுகாப்பமைச்சு முயன்றுள்ளது. இதேவேளை தென்னாபிரிக்காவிலிருநது 'பவள்' ரக கவச வாகனங்களை வாங்கவும் பாதுகாப்பு அமைச்சு முயன்றபடியுள்ளது; 200 பவள் கவசவாகனங்களை அரசு வாங்கவிருப்பதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. இத்துடன் சிறீலங்கா வான்படையின்பலத்தை அதிகரிக்கும்எண்ணத்துடன், மேலதிகமாக Mi -8 ரக உலங்குவானூர்திகளையும் ரஷ்யாவிலிருந்து சிறீலங்கா கொள்வனவு செய்யவிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயுதக் கொள்வனவு ஒருபுறமிருக்க, சிங்களப் படைகள் தமது ஆளணியிலும் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவெடுத்துள்ளன. 10 , 000 சிங்கள இளைஞர்களை படைக்குச் சேர்க்கும் திட்டத்தை இப்போது அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சிறீலங்கா அரசு செய்யும் பெருந்தொகையிலான இந்த ஆயுதக்கொள்வனவும் - படைபல அதிகரிப்பும் ஒரு பெரும் போருக்கான முன்னேற்பாடுகளதான் என்பது, சாதாரண குடிமகனுக்குமே விளங்கும்.

சிங்கள அரசின் இந்த போர் முஸ்தீபை சபாநாயகர் முகமதுவின் யாழ். பயணம் கெடுத்துவிடலாம் என்ற அச்சத்தின் விளைவாகவே, அவரது யாழ். வருகைக்கு அரசு தடைபோட்டது என்பது, சொல்லாமலே விளங்கக்கூடியது.

### B. M. P. டாங்கி

| | | |
|---|---|---|
| | முழு நீளம் | - 6. 74 மீற்றர் |
| | முழு அகலம் | - 2. 94 மீற்றர் |
| | முழு உயரம் | - 2. 15 மீற்றர் |
| இதன் வேகம்: | நல்ல பாதையில் | - 80 கி . மீ. (மணிக்கு) |
| | தண்ணீரிலாயின் | - 6 – 8 கி . மீ. (மணிக்கு) |
| | 2.2 மீற்றர் அகழியை இது கடக்கும் | |
| கவசத் தடுப்பு: | உடற் பகுதி | - 19 மி. மீ. |
| | சுழல் மேடை | - 23 மி. மீ. |
| ஆயுதம்: | 73 மி. மீ. பீரங்கி (40 எறிகணைகளுடன்) | |
| | 7. 62 மி. மீ. P. K. T. ஆயுதம் (2000 ரவைகளுடன்) | |

சிங்களப் படைகள் நடாத்தத் திட்டமிட்டுள்ள இந்த இராணுவப் படையெடுப்பு, பெரும்பாலும் ஈருடகத் தாக்குதல் முறையில் நடைபெற வாய்ப்புகள் உண்டு. புலிகளிடம் உள்ள பிரதேசங்களை ஆக்கிரமிப்பதுடன், சிங்களப்படைத் துறைக்கு சிம்மசொப்பனமாக மாறிவரும் கடற்புலிகளின் பலத்தையும் சிதைத்துவிட, அந்தப்படையெடுப்பை சிங்கள அரசு பயன்படுத்தலாம் என அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். சிங்களக் கடற்படைக்கென அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள சக்திவாய்ந்த பெருந்தொகை ஆயுதங்கள், இதை உறுதிப்படுத்துபவையாகவே உள்ளவ.

புதிதாக சக்திவாய்ந்த டாங்கிகளை, கப்பல்களை, போர் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதன்மூலம் போரை வென்றுவிடலாம் என்ற தப்பாசையுடனேயே, சிங்கள ஆளும் வர்க்கம் இப்போதும் உள்ளது. இந்த சித்தாந்தத்தையே கடந்த நான்கு வருடப் போரிலும் அது பிரயோகித்துத் தோல்விகண்டதை ஒரு பாடமாக எடுக்க, அரசு தயாராக இல்லை.

'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் முன்னர் ஒருமுறை குறிப்பிட்டதைப்போல சிங்களத் தளபதிகளும், சிங்கள ஆளும் வர்க்கமும் சூதாடிகளின் மனோபாவத்தில்தான் தொடர்ந்தும் வாழ்ந்துவருகின்றனர். 'எப்படியும் அடுத்ததில் வெற்றிகாணலாம்' என்ற அசட்டு நம்பிக்கையில் தனது அனைத்துப் பணத்தையும் படிப்படியாக சூதில் இழந்து, இறுதியில் ஒட்டாண்டியாகும் ஒரு சூதாடியின் செயற்பாட்டைப் போலவே, சிங்கள ஆளும் வர்க்கத்தினதும் சிங்களத் தளபதிகளினதும் செயற்பாடுகள் உள்ளன.

இத்தகைய சூதாடி மனோநிலை மாறினால்தான் போர் நிறுத்தப்பட வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால் இத்தகைய மனமாற்றம் விஜேதுங்காவின் ஆட்சியில் ஏற்பட வாய்ப்புகள் இருக்குமா? ○

### வடபுலத்தில் சிங்களப்படையின் பலம்

*சிறீலங்கா அரசினது படைபலத்தில் ஏறத்தாள முக்காற் பங்கு வடபுலத்திலேயே குவித்து வைக்கப்பட்டிருக்கின்றது. சுமார் ஒரு இலட்சம் ஆட்தொகையைக்கொண்ட சிங்கள இராணுவத்தில் 70,000 பேர் அதற்குரிய ஆயுத தளபாடங்களுடன் வடபுலத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர். இதேபோன்று சிங்களக் கடற்படையும் வடபுலக் கடலிலேயே தனது பலத்தின் பெரும்பகுதியை மிதக்கவிட்டுள்ளது. விமானப்படை நிரந்தரமாக வடபுலத்தில் நிறுத்திவைக்கப்படுவது குறைவாக இருந்தாலும் அதனுடைய பலத்தில் மிகப் பெரும்பகுதி வடபுலத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது.*

# ஆழப்புதைக்கப்பட்டவை மீளத் தோண்டப்படுகின்றன

## இது கொள்கை மாற்றமல்ல; அதிகாரம் கைநழுவாது பார்த்தலாகும்.

"என்னைக் கொன்றாலும் எனது கொள்கைகளைக் கொன்றுவிடாதீர்கள்'' என்று, கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் திரு. பிரேமதாசா கூறியிருந்தார். ஆனாலும் அவர் இறந்தபின், படிப்படியாக அவரது நினைவுகளும் - கொள்கைகளும் அவரது கட்சியினராலேயே ஆழப்புதைக்கப்பட்டன. ஆனால் இப்போது, தென்மாகாணசபையில் ஐ. தே. கட்சி தோல்வியைத் தழுவியபின், பிரேமதாசாவின் நினைவுகளையும் - அவரது கொள்கைகளையும் விஜேதுங்கா அரசு தோண்டி எடுக்கத் தொடங்கியுள்ளது.

பிரேமதாசாவின் கொள்கைகளை அவர் இறந்தபின் ஜனாதிபதிப் பதவி ஏற்ற டி. பி. விஜேதுங்கா புதைத்ததற்கு, பல காரணங்கள் உண்டு.

பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் பத்திரிகைகளின் எழுத்துச் சுதந்திரம் தொடர்பாக அவர் காட்டிய கடுமையான போக்கும், மற்றும் அவர் அமைத்த சட்டவிரோத ஆயுதக்குழுக்களின் அராஜகமும், அவரது அரசியல் எதிரிகளை அவர் அணுகிய விதமும் ஒன்றுசேர்ந்து, பிரேமதாசாவை ஒரு கொடூரமான சர்வாதிகாரியாகச் சித்திரித்துக்காட்டின. இதற்கு மேலும் தூபமிடுவதுபோல, சிங்கள மேட்டுக் குடியினர் பிரேமதாசாமீது வைத்திருந்த காழ்ப்புணர்வும் அமைந்தது.

பிரேமதாசாவின் மறைவைத் தொடர்ந்து பதவிக்குவந்த டி. பி. விஜேதுங்கா, பிரேமதாசா உருவாக்கிய சட்டவிரோத ஆயுதக் குழுக்களைக் கலைத்தும், பத்திரிகைகள் மீதான கெடுபிடிகளைத் தளர்த்தியும், ஆடம்பர அரசு வைபவங்களைத் தவிர்த்தும், சிங்கள மக்களின் கவனத்தை ஈர்க்க முயன்றார்.

பிரேமதாசா மீதிருந்த வெறுப்புக் காரணமாக சிங்கள பத்திரிகை உலகமும் - சிங்கள மேட்டுக் குடியினரும், பிரேமதாசாவின் அரசியல் கொள்கைகளையும் - அவரது அரசியல் வேலைத்திட்டங்களையும் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர். டி. பி. விஜேதுங்காவை ஒரு சீர்திருத்தவாதிபோலச் சித்திரித்து பிரேமாவின் கொள்கைகளை ஓரங்கட்டவைக்க விஜேதுங்காவைத் தூண்டினர். இதேவேளை ஐ. தே. கட்சிக்குள்ளேயே, அதன் தலைமையைத் தீர்மானிக்கும் சக்திவாய்ந்த வட்டத்தினரில் அநேகம் பேர், பிரேமதாசா உயிருடன் இருக்கும்போதே அவர்மீது வெறுப்புக்கொண்டிருந்தனர். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பிரேமா இறந்ததும் அந்த வட்டமும் பிரேமாவையும் - அவரது கொள்கைகளையும் ஒதுக்கிவைக்கும்படி புதிய ஜனாதிபதியை நெருக்கியிருந்தன.

பிரேமதாசாமீது சிங்களப் பத்திரிகை உலகமும் - சிங்கள மேட்டுக் குடியினரும் - கட்சியில் ஒருபகுதியினரும் வைத்திருந்த இத்தகைய வெறுப்புணர்வை, சிங்கள மக்களின் உணர்வாக விஜேதுங்கா விளங்கிக் கொண்டார். எனவே, பிரேமதாசாவினது கொள்கைகளை நிராகரிப்பதன்மூலம் பரந்துபட்ட சிங்கள மக்களின் ஆதரவைப் பெறமுடியும் என்று, டி. பி. நம்பினார். அத்துடன் தன்னை ஒரு வேறுபட்ட தலைவனாகக் காட்டிக்கொள்ளவும் விரும்பினார். ஆகவே பிரேமதாசாவினது நினைவுகளையும் - அவரது கொள்கைகளையும் ஆழப்புதைத்தார்.

ஆனால் பிரேமதாசாவின் வேலைத்திட்டங்கள், பெரும்பாலும் கிராமப்புறச் சிங்கள மக்களினதும் நகர்ப்புறங்களில் வாழ்ந்த அடிமட்டச் சிங்கள மக்களினதும் நன்மைகளை நோக்காகக்கொண்டிருந்தன என்பதை, பிரேமதாசா எதிர்ப்புவாதிகள் கருத்திலெடுக்கவில்லை. அதேவேளை, பிரேமதாசாவின் பேச்சுக்களும் - அவரது விளம்பர யுக்திகளும சாதாரண சிங்கள மக்களைக் காந்தம்போல் கவர்ந்திழுத்திருந்தன என்பது மறக்க முடியாத உண்மை என, சிங்கள விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நடுநிலைமைவாதிகள் கூறுவதைப் போல, எதிரும் புதிருமான இரண்டு முகங்களுடன் பிரேமதாசா உலவினார். தனது அரசியல் எதிரிகளுக்குக் கொடூரமான முகத்தைக் காட்டும் பிரேமதாசா மற்றவேளைகளில், சாந்தமும் - ஏழை மக்களில் அக்கறைகொண்ட ஒரு தலைவனாகவும் வேடம்போட்டார்.

பிரேமதாசாவின் முதல் முகத்தை விமர்சித்தவர்களின் அணியில் நின்ற விஜேதுங்கா குழுவினர், அவரின் மறுமுகத்தை முழுமையாக நிராகரித்ததுதான் தென்மாகாணத் தேர்தலில் ஐ. தே. கட்சிக்குத் தோல்வியைப் பெற்றுக்கொடுத்தது என்று, சில அரசியல் விமர்சகர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

பிரேமதாசாவினது நினைவுகளை மீள உயிர்ப்பிக்காதுவிட்டால் - பிரேமதாசாவினது கொள்கைத் திட்டங்களைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தாது விட்டால் - ஆட்சியை நிர்ணயிக்கப்போகும் அடுத்த தேர்தலிலும் ஐ.தே. கட்சி தோல்வியையே தழுவும் என்று, இப்போது விஜேதுங்கா அணியினர் உணர்ந்து கொண்டுவிட்டனர்.

வருகின்ற 'மே' தினத்தன்று - பிரேமதாசா கொல்லப்பட்ட ஒரு வருட பூர்த்தியன்று - பிரேமதாசாவின் உருவச்சிலை ஒன்றுக்கு மாலை அணிவிக்க இருக்கும் டி. பி. விஜேதுங்கா, பிரேமதாசாவின் கொள்கைகளைத் தத்தெடுக்க இருக்கின்றார். ○

---

# நின்று நிலைக்கப்போகும் இரண்டு கலைவடிவங்கள்

கலைகள் யாவும் காலத்தின் பதிவாகும். மனதுக்கு இதம் தருவது மட்டும்தான் பகோன்னதமானவை அல்ல...... அரங்கிற்கும் பார்வையாளருக்கும் இருக்கும் உறவானது, கலைஞருக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவைப் போன்றது. இரண்டும் பிரிக்கமுடியாதது. போராட்டம் நடைபெறும் வேளைகளிலெல்லாம் அப்போராட்டத்தை மக்களுக்கு உணர்த்தி போராடத் தூண்டுவதும், போராட்டம் நடைபெற்ற காலத்தில் அச்சமூகத்தின் எழுச்சி - உணர்வு - எண்ணம் - எப்படி எப்படியெல்லாம் இருந்தன என்பதை வருங்காலத் தலைமுறைக்கு உணர்த்திநிற்பதும் கலை வடிவங்களே. அன்றாடம் இன்னல்களுக்குள்ளும், இழப்புகளுக்குள்ளும் வாழும் ஈழத்தமிழினத்தின் அவலங்களையும், அதிலிருந்து மீளத் துடிக்கும் அதன் ஆத்மாவையும், அண்மையில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் அரங்கேற்றிய இரண்டு கலைப் படைப்புகளில் காணமுடிந்தது. ஒன்று, முல்லை மாவட்டக் கலைஞர்களின் ஆக்கிரமிப்பாளர் அவலம் என்ற தெருக்கூத்து; மற்றொன்று, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யாழ். மாவட்டத்தினர் உருவாக்கிய சதியை வென்ற சாவுகள் ஆகும்.

கேணல் கிட்டுவின் தாயகம் நோக்கிய பயணத்துடன் ஆரம்பமாகி, நடுக்கடலில் இந்தியச் சதியால் கிட்டுவும் ஒன்பது வேங்கைளும் தீயுடன் சங்கமிப்பதும், எங்கள் தாயகத்துக்கு அவர்கள் இடையூறேதும் இன்றி வந்திருப்பார்களானால் இங்கு ஒரு ஆனந்த அலை அடித்திருக்கும் என்பதையும், ஆனால் கடலிலே அவர்கள் காவியமாகிவிட்டவுடன் எம் மண் படர்கொம்பிழந்த பச்சைக்கொடி போலாகிவிட்டதையும், பார்ப்பவர்களை அச்சொட்டாக உரைச் செய்ததில் வெற்றிகரமான கலைப் படைப்பாகிவிட்டது. தாயகம் நோக்கிய தளபதி கிட்டுவுக்கும் ஒன்பது வேங்கைகளுக்கும் இடையில் என்ன நடந்திருக்கும்? அக் கோர சம்பவம் நடக்கும்போது ஆக்கிரமிப்பாளர்களுடன் அவர்கள் எப்படி நடந்திருப்பார்கள் என்பதை, பாடல்கள் மூலமும் அதற்கேற்ற ஆடல்கள் மூலமும், பார்க்கும் விழிகளில் கண்ணீரையும் கடுஞ் சினத்தையும் வரச் செய்ததில், இந்தக் கலைப்படைப்பு தன் பணியைச் செவ்வனே செய்து முடித்திருந்தது. இசை நாடகத்துக்குரிய அம்சங்களையும் ஆட்டக்கூத்துக்குரிய அசைவுகளையும் இணைத்து, புதிய தேடலுக்கும், காலத்தின் ஒத்திசைவுடன் கையாளப்பட்டதிலும் இக்கலைப்படைப்பு வெற்றி கண்டுள்ளது.

முல்லை மாவட்டக் கலைஞர்களினால் வீதிகளில் ஆடப்பட்டு, பலராலும் விதந்துரைக்கப்பட்ட வீதிக்கூத்தான 'அரசின் தடுமாற்றம்', ஆட்ட முறையிலும் மக்களை உணர்வு நிலைக்கு உள்ளாக்கியதிலும், அற்புதமானதாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. சிங்களப் பேரிவவாத அரசு தன்னின இளைஞர்களையும் தமிழினத்தையும் போரின்மூலம் எப்படி ஏமாற்றுகின்றது என்பதையும், அதன் போக்கு வருங்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் எடுத்துரைத்து, விடிவுக்கான ஒளிகாணவைத்ததில் இக் கலை வடிவம், முதன்மையும் முக்கியமானதுமான உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது. இதிலும் குறிப்பாக ஆட்டமுறைமையிலும், பாரம்பரியத்தை சமகால கருப்பொருளுடன் இணைத்ததிலும், முல்லை மாவட்டக் கலைஞர்கள் வெற்றி கண்டுள்ளவர் என்பது விதந்துரைக்கக்கூடியதாகும். தமிழரின் பாரம்பரிய - பழமையான - கலைவடிவங்களை எப்படிப் புதியன நோக்கி நகர்த்தி வெல்லலாம் என்ற கேள்விக்கு, முல்லை மாவட்டக் கலைஞர்கள் விடைகூறி நிற்கின்றனர்.

**புதுவை இரத்தினதுரை**

எமது தமிழீழ மண்ணின் பிரதேசங்களுக்குள் பாரம்பரிய கலைவடிவ முறைமைகளில் வித்தியாசங்களுண்டு. மட்டக்களப்பு, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் என்று அரங்கேற்றலிலும் பாட்டுகளின் தாளக்கட்டுகளிலும் ஆட்ட முறைகளிலும் வேறுபாடுகளுண்டு. தொடர் ஓட்டமாக வழிவழியான பாதச்சுவடுகளின் பின்பற்றலில் இவை அப்படியே இன்றும் பேணப்படுகின்றன. புதிய தேடலில் எல்லோரும் ஒன்றாக நின்றாலும், மேற்குறிப்பிட்ட கலையாக்கப் பண்பில் இவை வித்தியாசப்படுவது தவிர்க்கமுடியாததே. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், அவரவர் கலைவடிவங்களை அறிந்துகொள்ளவும், ஒத்துமாற்றிக்கொள்ளும் வகையில் முல்லை மாவட்டக் கலைஞர்கள் ஒருமாதமாக யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று, இங்கு பல இடங்களில் தங்கள் கலைப்படைப்புகளை அரங்கேற்றியமை, இந்தக் கலைப் பரிமாற்றத்திற்கு வழி சமைத்துள்ளது. அவர்கள் பணி பாராட்டுக்குரியது. அதுபோல, யாழ். மாவட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட 'சதியை வென்ற சாவுகள்' என்ற - கேணல் கிட்டுவின் இறுதிநேர சம்பவங்களை உள்ளடக்கிய - கலைப்படைப்பு, வன்னிப் பிராந்தியங்களுக்குச் செல்லவுள்ளதும் வரவேற்கத்தக்கதே.

சதியைவென்ற சாவுகளும், அரசின் தடுமாற்றமும் அண்மைக் காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் அரங்கேற்றங் கண்டவற்றில் உன்னதமானவை என்பதில், எவருக்கும் அபிப்பிராயபேதம் ஏற்படமாட்டாது.

கலைகள் வெறும் இன்பமூட்டுவன அல்ல; மக்களின் விடிவுக்கான வெளிச்சங்களாக வேண்டியன. இன்று போராடும் பூமியில் விளையும் கலைகளாயினும் இலக்கியங்களாயினும், அம்மண்ணின் மக்களைத் தொடர்ந்தும் போர்க்குணம் மிக்கவர்களாக்கி, போராட்டத்தை வெற்றிக்கம்பம் நோக்கி விரைவுபடுத்தவேண்டும். ஒரு காலத்தின் பதிவாகப் பதியப்படும் கலைப் படைப்புக்கள், காலம் கடந்தும் நிலைத்து நிற்கும். அந்தவகையில், மேற்குறித்த இரண்டு படைப்புக்களும், நிறைவைத் தருகின்றன. இப் படைப்புக்களுடன் இணைந்த கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள்! ○

# விடுதலையின் சிகரத்தை நோக்கி

## இரும்பின் உறுதி பெற்றுவிட்ட மக்கள் : இனித் தளர்வு இல்லை

எங்கள் மக்கள் துணிந்துவிட்டார்கள்; எதனையும் எதிர்கொள்ளும் திண்மையை எங்கள் தேசம் பெற்றுவிட்டது. பயம் என்பது முற்றாகவே அற்றுப்போய்விட்டது என்று சொல்ல முடியாதுதான்; ஆனாலும் எங்கள் மக்கள் துணிந்துவிட்டார்கள். இலக்கினை அடையும் வைராக்கியத்தில், இப்போது அவர்கள் இரும்பின் உறுதியாக இறுகிப்போய் இருக்கின்றார்கள். இலட்சிய வெற்றியின் நம்பிக்கை அவர்களது விழிகளில் பிரகாசிக்கின்றது. மக்களின் மனோவுலகில் மிகப்பெரிய மாற்றம் நிகழ்ந்து வருகின்றது. வெளிநாட்டவர்களே அதிசயிக்கின்ற அளவுக்கு - வியந்துரைக்கின்ற அளவுக்கு - எமது மக்கள் துணிவுறுதியைப் பெற்றிருக்கின்றார்கள்.

இந்தியாவைச் சேர்ந்தவரும்- நாடகாசிரியரும், 'சுபமங்களா' சஞ்சிகையின் ஆசிரியருமான திரு. கோமல் சுவாமிநாதன் அண்மையில் தமிழீழத்திற்கு 'இலக்கியப் பயணம்' செய்தது எல்லோர்க்கும் தெரியும் வந்தவர், திரும்பிப் போகும்போது, கொழும்பில் - அரச அமைச்சகக் கட்டடமொன்றில் நடந்த கூட்டமொன்றில் சிறப்புரை ஆற்றும்போது -

" அங்கு பெற்றோல் இல்லை; மண்ணெய் இல்லை; மின்சாரமில்லை. ஆனால், வாகனங்கள் ஓடுகின்றன; வீதி விளக்குகள் எரிகின்றன. தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய்மூலம் வாகனங்கள் ஓடும் விந்தையை உலகத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமே காண முடியும்" என்று வியந்தவர், " நான் நாடு திரும்பியதும் இந்திய நாட்டிலும் இந்த விந்தைகளைப் பின்பற்றினால் என்ன எனறு கேட்கவிருக்கிறேன்" என்றும் சொன்னார். " அந்த மக்கள், தங்கள் துயரங்களை மறந்து - எதையும் தாங்கும் இதயத்தோடு மிக நிதானமாகவும், உறுதியாகவும் செயற்படுவது கண்டு" தான் " பிரமித்து"ப் போய்விட்டதாகவும் அவர் கூறினார்.

இவருக்கு முன்னர் இன்னுமொருவர் இங்கு வந்திருந்தார். பிரித்தானிய தேசத்திலிருந்து வந்திருந்த அவரது பெயர் திரு. சின்னமணி. அவர், லண்டனில் 'லூசியன்' என்ற நகரின் முதல்வர். இங்கு வந்து, இருந்து பார்த்து, கலந்து பேசிவிட்டுப் போனவர், தனது உணர்வலைகளை பி. பி. சியின் 'தமிழோசை'க்கு அளித்த செவ்வியின்போது வெளியிட்டார். அவர், திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசத்தின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது -

" இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பிரிட்டனில் மக்கள் பெரும் கஷ்டப்பட்டனர். தாம் கஷ்டப்பட்ட போதிலும் யுத்தம் நடக்கின்றது என்ற முறையில் அவர்கள் தைரியத்துடன் வாழ்ந்தனர். இதே நிலைமையை நான் யாழ்ப்பாணத்தில் கண்டபோது எனக்குப் பெருமை ஏற்பட்டது. அங்குள்ளவர்கள் மகிழ்ச்சியாகவும், தைரியமாகவும் இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது" என்றுசொன்னவர், தமிழர்கள் படுகின்ற துன்பங்களைப் பற்றிய ஒரு வினாவுக்கு கீழ்வருமாறு விடைதந்தார்.

" அங்குள்ள மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள்; அவர்கள் பரிதாபமாக இருப்பதாக நான் கூறமாட்டேன். வேறு சிலர் போல 'அரசே! அவர்கள் கஷ்டப்படுகின்றார்கள்; தயவு செய்து உதவுங்கள்' என்று மன்றாட நான் விரும்பவில்லை. அப்படிக் கேட்பது அந்த மக்களது முயற்சிக்கு எதிரானது. அப்படி நான் ஒருபோதும் கேட்கமாட்டேன். உறுதியாகவும், சுயமரியாதையுடனும், தன்மானத்துடனும் வாழும் மக்களை மதித்துப் பேசுவதையே நான் விரும்புகின்றேன்."

உண்மைதான். எங்களது மக்கள் இப்போதெல்லாம் எவ்வளவோ மாறிப்போய்விட்டார்கள்; நிரம்பவும் துணிந்துவிட்டார்கள். இந்த யுத்த சூழ்நிலைக்கு ஈடுகொடுத்து வாழ அவர்கள் இசைவாக்கம் பெற்றுவிட்டார்கள். என்ன இரைச்சல் கேட்டாலும் செவிகளை நிமிர்த்தி " பொம்மரோ......?" என்று முழிப்பதாக இருந்த ஒரு காலம் போய்விட்டது. வீட்டிற்குள் இருந்தபடியே மேலால் போவது என்ன வகைப் போர்விமானம் என்பதை சத்தத்தில் அனுமானித்துக்கொண்டு, அடுத்துச் செய்ய வேண்டியதைப்பற்றி முடிவு செய்கின்றார்கள். எடுத்ததற்கெல்லாம் பயந்து சிதறியோடி அல்லோல கல்லோலப்பட, அவர்கள் இப்போது ஆயத்தமாக இல்லை. நீண்ட கால யுத்த நிலைமைகளின் பட்டறிவால், நின்று நிதானித்து நிலைமைக்கேற்ப முடிவெடுக்கும் அளவுக்கு மக்கள் பக்குவப்பட்டுவிட்டார்கள்.

"இந்தச் சண்டையும் போதும் - இதோட மனிசர் படுகிற கஸ்ட்டமும் போதும்" என்ற முணுமுணுப்பெல்லாம் இப்போது கேட்பது குறைவு. அது ஒரு காலம்; இந்தப் போர் தந்த துன்பங்களும், வேதனைகளும், அழிவுகளும் மக்களுக்குள் ஒரு சலிப்புத்தன்மையை இயல்பாகவே ஏற்படுத்திவிட்டிருந்தது உண்மைதான். ஆனால் இப்போது அந்தநிலை மாறிவிட்டது. போரைக் கண்டஞ்சி போக்கிடம் தெரியாது ஓடுகிற காலம் மலையேறிக்கொண்டிருக்கின்றது. குண்டு விழவிழக் குடியிருக்கும் திண்மையை அவர்கள் பெற்றுவிட்டார்கள். இப்போது அவர்களுக்குத் தேவையானது நிரந்தரமான நிம்மதி; தட்டிக் கேட்க யாருமின்றி நீட்டிப்படுக்க ஒரு தாயகம்; எங்கள் பாட்டை நாங்களே பார்த்துக்கொண்டு, அரசாண்டு வாழ ஒரு சுதந்திரம். இவற்றைப் பெற வேறு வழியில்லை - போரைத்தவிர; இப்போது அவர்களுக்கு இதில் எந்தக் குழப்பமும் இல்லை. இந்தப் போரோடு மக்கள் இரண்டறக் கலந்துவிட்டார்கள்.

எமது மக்களின் சிந்தனைகள் இப்போது வித்தியாசப்பட்டவையாக இருக்கின்றன. அதாவது அவர்கள் இன்று போராட்டத்தை முன்னெடுப்பதுபற்றியே சிந்திக்கின்றார்கள். போரின் போக்கு என்னவிதமாக அமையப் போகின்றது? யுத்த அரங்கில் அடுத்தகட்டச் செயற்பாடுகள் என்ன வகையானவையாக நடக்கப்போகின்றன? என்பவற்றைப் பற்றி ஆராய்கின்றார்கள்; எதிர்வு கூறுகின்றார்கள். அரசியல் - இராணுவ ரீதிகளில் எதிரியின் நகர்வுகள் எப்படி அமையப் போகின்றன? அதற்கு தமிழர் தரப்பிலான பதில் நடவடிக்கைகள் எப்படியானவையாக இருக்கவேண்டும் என்பவற்றைப் பற்றி அக்கறையோடு பேசுகின்றார்கள்: ஊகங்களைத் தெரிவிக்கின்றார்கள். அவர்களுடைய கணிப்பீடுகளிலுள்ள சரி, பிழைகளுக்கப்பால் - இந்தப் போரின் இன்றியமையாமையை அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள் என்பது முக்கியமானது.

யாழ்ப்பாணத்துக்குப் பக்கத்தில் உள்ள ஊர் கொக்குவில் - அங்கு ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். சுற்றத்தார் சூழ்ந்து வாழ்த்த புத்தம் புதுக் கத்தியால், சின்னக் குழந்தை வெட்டி எடுத்து உண்டு மகிழ்ந்த 'கேக்' என்ன வடிவத்தில் இருந்திருக்கும்......? வண்ணத்துப் பூச்சி ....? ரோஜாப் பூ......? வயலின்......? அல்ல; இவை எதுவுமேயல்ல. பூநகரியிலிருந்து புலிகள் மீட்டுவந்த 'யுத்த ராங்க்'காக ஐசிங்கேக் அவதரித்து நின்றது.

இப்போதெல்லாம் எங்கள் மக்கள் இராணுவ ரீதியாகச் சிந்திக்கத் துவங்கிவிட்டார்கள் இன்றைய உலகின் போக்கு என்ன வழிமுறையில் போகின்றது என்பதை அவர்கள் புரிந்துகொண்டுள்ளார்கள். எனவே, எமது மக்கள் சொந்தப்பலத்தைப்பற்றி நினைக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் பலமின்றிப் போனால், நாங்கள் நிலமின்றிச் சாவோம் என்பதை அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். எனவே, " பலவான்தான் வாழ்வான்" என்பது அவர்கள் தாரக மந்திரமாகிவிட்டது அடிக்கு அடி கொடுக்க அவர்கள் துணிந்துவிட்டார்கள். ஏற்கெனவே எங்கள் மக்கள் சாதாரணமானவர்கள் அல்ல; 'அடியைப்போல அண்ணன் தம்பி உதவான்' என்றும், 'அடிக்கு மேல அடிபோட்டால் அம்மியும் நகரும்' என்றும் தத்துவார்த்தமான நல்ல முதுமொழிகள் அவர்களிடையே வழக்கில் உள்ளன. இப்போது, " முறையான நல்ல அடியள் குடுத்தாத்தான் சிங்களவன் திருந்துவான்" என்று அவர்கள் பேசிக்கொள்கின்றார்கள். இதைச் செய்யவேண்டுமானால், ஆளணிகள் ஆயுதகலங்களோடு சொந்தப் பலம் தேவை. எனவே எமது மக்கள் இப்போது இராணுவ ரீதியாகச் சிந்திக்கத் துவங்கிவிட்டார்கள்.

எங்கள் மக்கள் அடக்குமுறைகளாலும், ஆக்கிரமிப்புகளாலும் புடம்போடப்பட்டவர்கள். இப்போது ஆன்ம உறுதிபெற்று எழுந்துவிட்டார்கள். இனி யாரும் அவர்களை அடிபணியவைக்க முடியாது. எமது மக்கள் இன்று கொண்டுள்ள இந்தத் துணிவுறுதி எங்கள் தேசத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய வெற்றி: விடுதலைப் போராட்டம் கண்ட ஒரு பரிணாம வளர்ச்சி. தேசபற்றுக்கு, எமது மக்களுக்கு நிகராக எவருமே இல்லையென நாங்கள் பெருமிதத்தோடு கூறமுடியும்.

போருக்குள் வாழ்ந்து, போருக்கு ஈடுகொடுத்து, போரினால் முன்னேறி, போருக்குப் பக்குவப்பட்டு மனவுறுதியைப் பெற்றுவிட்ட எமது மக்கள், விடுதலையின் சிகரத்தை அடையும்வரை போரை முன்னெடுத்துச் செல்வது பற்றியே இப்போது சிந்திக்கின்றார்கள். இனி அவர்கள் தளர மாட்டார்கள்! ○



பட்டினியால் இறக்குந்தறுவாயில் ஒரு சூடானியக் குழந்தை

### நாங்கள் என்ன செய்ய?

மலருமுன் சருகாகும் கறுப்பு மலரே!
மரணத்தின் வாசலில் நீ தள்ளாடுகின்றாய்.
மனுக்குலத்தின் மனச்சாட்சி
உன்முன் ஊமையாகி விட்டது.
குனிந்து மண்ணில் என்ன செய்கின்றாய்.
அட; தாயகத்துக்கு கடைசி முத்தமா?
திரும்பிப் பார்.
உன் இறுதி மூச்சை எதிர்பார்த்து
பின்னால் ஒரு பிணம் தின்னி.
" வளர்ந்து வரும் நாடும்" " வல்லரசும்"
நல்ல குறியீடு.
உன்னை எடுத்துப் புதைக்கக்கூட
எவருமே இல்லையா?
தின்னக் கழுகுதானே காத்திருக்கிறது.
உன் தாயகத்துக்கு ஏன் இப்படி ஆச்சு?
நாங்களும்தான் போராடுகின்றோம்.
நலியவில்லையே.
பட்டினிக்குப் பணியவில்லையே.
என்ன செய்வது.
கறுப்பு நாட்டில்
ஒரு பிரபாகரன் பிறக்கவில்லையே
சின்ன மலரே,
நாங்கள் என்ன செய்ய?

- புதுவை இரத்தினதுரை ○

## லெப். கேணல் நவநீதன்

# ஒரு உண்மை வீரனின் கதை

நவநீதனைப்பற்றிச் சொல்வதானால் சண்டையில் தான் ஆரம்பிக்க வேண்டும்; சண்டைகளால் தொடரவேண்டும்; சண்டையொன்றில் முடிக்கவேண்டும். அவனது சண்டைகளை விளக்குவதன்மூலம் தான் அவனை வர்ணிக்க முடியும். அந்தளவுக்கு சண்டைக்களங்களிலேயே அவனது வாழ்வு உருண்டோடியது; சண்டைக்களங்களிலேயே அவன் தூங்கி விழித்தான்.

**பழம்பாசியில் ஒரு சண்டை.**

பால்ராஜ் அவர்கள் வன்னிக்குத் தளபதியாக இருந்தபோது, அவரது பாதுகாப்பு அணிக்குப் பொறுப்பாக இருந்தவன் நவநீதன்தான்.

தவிர்க்கமுடியாத ஒரு பயணம்; தளபதி போகவேண்டியிருந்தது. அரசியலுக்குப் பொறுப்பாக இருந்த லெப்ரினன்ட் கேணல் சந்திரனும் கூட. போயே ஆகவேண்டும்; நோக்கம் முக்கியமானது.

அது இந்தியப்படைக் காலம்; இடறுப்படும் இடங்களிலெல்லாம் அவர்கள் நகர்ந்துகொண்டிருந்த ஒரு சூழ்நிலை. மிக நெருக்கடியான ஒரு நேரம்; இடமும் அப்படித்தான்; மைய இலக்குவைத்து இந்தியர்கள் படை நடாத்திக்கொண்டிருந்த மணலாற்றின் வேலியோடு-

குறைந்தளவு வீரர்களையே கொண்டு நகர்ந்துகொண்டிருந்த எம் அணிக்கு, திசையறி கருவி வழிகாட்டிக்கொண்டிருந்தது. தண்ணிமுறிப்பு வீதியைக் கடந்து பழம்பாசிக் காட்டுக்குள் இறங்கியபோது- வழமைபோல முதலாவது ஆளாகச் சென்றுகொண்டிருந்த நவநீதன், திடீரென நடை தயங்கி, 'அலேட் பொசிசனில்' வைத்திருந்த 'எம்-16' ஐ உயர்த்தி, மூக்கைச் சுழித்துக் கொண்டு திரும்பினான்.

அநேகமான தடவைகளில் இந்தியர்களின் அரவம் காட்டி, எம்மை அரட்டிவிடுகிற அந்த 'மணம்' - சற்றுக் கூடுதலாகவேசுவாசத்தோடு கலந்தது.

காட்டுப் பாதை; இடைக்கிடை நாம் பயன்படுத்துகின்ற தடம்தான் - அவதானித்திருக்கக்கூடிய எதிரி. இரை தேடி வந்திருந்தான். ''இந்தியப்படையின் விசேட அதிரடிக் கொமாண்டோக்கள்'' - தடயங்களை வைத்து புலிகள் ஊகித்துக் கொண்டனர். எங்கள் பாதையின் ஏதோ ஓர் இடத்தில் நிச்சயமாக எதிரி நிலை எடுத்திருப்பான்; நம்பிக்கை உறுதியாக இருந்தது.

கைவிட முடியாத பயணம்; தேவை பெரியது. இது ஒருபுறம் போக, 'அடிக்கப் போகின்றவனுக்குத் திருப்பி அடித்தே ஆகவேண்டும்' என்ற ஆவேசமும் எழுந்தது. நவநீதனே முனைப்பாக நின்றான்.


தளபதி ஒழுங்கமைத்தார்; அணி இரண்டாக்கப்பட்டது. பிரதான குழுவிலிருந்து குறிப்பிட்ட ஒரு தூரத்தில் துணைக்குழு நகரும்.

ஒரு பதுங்கித் தாக்குதலானது பலவகைப்பட்டதாக அமையும். வலதுபுறமிருந்து வரலாம்; இடதுபுறமிருந்து வரலாம்; நேரெதிலிருந்து வரலாம். சில சமயம், வலது அல்லது இடது புறத்தோடு எதிர்ப் பக்கத்திலிருந்தும் ''L'' வடிவத்தில் வரலாம். இவற்றில் எது நடந்தாலும் எதிர்கொள்ளக்கூடியவாறு திட்டமிடப்பட்டது; பிரதான குழு தாக்குதலைச் சந்திக்க, துணைக்குழு காட்டுக்குள் இறங்கி, வளைத்து, எதிரியை நாரிப்பக்கத்தால் தாக்கவேண்டும். நவநீதன் தான் கொமாண்டர்.

அணி அசையத்துவங்கியது; வழமைபோல நவநீதன்முன்னுக்கு. அது அவனுக்கே உரிய துணிவு - கத்திக்கொண்டு பறந்த ஒரு காட்டுக் குருவியைத் தவிர நிசப்தம் தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருந்தது; 'மயான அமைதி'யை விடப் பயங்கரமானது 'வன அமைதி'. எதிர்பார்க்கும் சண்டை; எதிர்ப்படப்போகும் நேரத்தை எதிர்கொள்ளத் துணிந்த மனது. அதிகரிக்கும் இதயத் துடிப்போடு கலந்த ஆக்ரோசம். சுடத் தயாரான துப்பாக்கிகளின் குழல்வாய்கள் நிமிர்த்தி - பாயத்தயாரான புலிகளின் பதுங்கல் நகர்வு. சருகு நெரிபடும் சத்தத்தோடு மட்டும், அடிமேல் அடிவைத்து அணி நகர்ந்துகொண்டு .....

திடீரென, இயல்பு மாறிப்போயிருந்தது காடு; இயற்கை குலைந்துபோயிருந்தது வனம். சூரியனை நோக்கி வளரவேண்டிய மரக்கிளைகள் சில, வளைந்து, பூமியை நோக்கி இருந்தன. இருக்கக்கூடாத இடங்களில், சருகுகள் கூடுதலாய்.

சருகுகளின் மறைப்பினூடு மின்னுகிற எல் எம். ஜி. குழல்; இலைகுழைகளின் உருமறைப்பிற்குள் வெட்டிவெட்டி முழிக்கும் கண்கள்; மெல்ல அசையும் 'ஹெல்மெட்'டுகள்.



கண்டுகொண்ட நவநீதன் நிதானிக்க, பார்த்துவிட்ட தளபதி சைகை செய்ய, தாசனின் துணைக்குழு காட்டுக்குள் இறங்க - மூர்க்கத்தனமான சண்டையைத் தொடங்கிவைத்தான் நவநீதன். எட்டித்தொடும் தூரத்திற்குள் இயந்திரத் துப்பாக்கிகளின் குமுறல்; எம்.16 சுடுகுழல் சிவக்க, எதிரிகளின் உச்சந்தலையைக் குறிவைத்தான் அந்த வீரன். இந்தியக் கொமாண்டோக்களின் முன்வரிசை அணியை, பதுங்கிய இடத்திலேயே அவன் படுக்கவைத்தது, பிரமிப்பூட்டுகிறவேகம். முதலாவது ஆளைச் சுட்டதிலிருந்து, சண்டையை நடாத்தி, துரத்தித் துரத்தி அடித்து, ஆயுதங்களை எடுத்து முடித்துவைத்து- எல்லாமே அவன்தான்.

'அதிரடியை முறியடித்து அதிரடித்தல்' - படையியல் விஞ்ஞானத்தில் இதற்கு 'Counter Ambush' என்று பெயர். எங்கள் போராட்ட வரலாற்றில் இது ஒரு முக்கிய சம்பவம்; தளபதி பால்ராஜின் நெறிப்படுத்தலில் செய்வித்து முடித்தவன் நவநீதன்.

ஆனால், தினேசுக்கு இதயத்துக்குப் பக்கத்தில் வெடிகொழுவிக் கொண்டது. பீறிட்டுப் பாய்ந்த இரத்தத்திற்கு சாரத்தைக் கிழித்துக் கட்டுப் போட்டு, தடிமுறித்து 'ஸ்ரெச்சர்' கட்டித் தூக்கமுற்பட்டபோதும், வேதனையின் முனகலோடு தினேஸ் மறுத்துவிட்டான்.

ஆசையோடு தளபதியின் கன்னங்களைத் தடவினான்; கூடவந்த தோழர்களின் நிலைமைகளை விசாரித்தான்; பெற்றெடுத்த ஆயுதங்களைத் தொட்டுப்பார்த்துப் பூரித்தான்; எங்கள் 'டடி' முகாமில் - மற்றத் தோழர்களுக்குப் பக்கத்தில் தான் தன்னையும் புதைக்குமாறு வேண்டியவன் முனகி முனகி, மெல்ல அடங்கி எல்லோரையும் பார்த்து விழிகளை மூடியபோது, வெற்றியின் ஆயுதங்களைக்காட்டி அதற்கு வித்தாகிப் போனவனை வழியனுப்பிவைத்துவிட்டு, நவநீதன் இறுகிப்போய் நின்றான்.

**வரலாற்றில் பொறிக்கப்பட்ட மாங்குளம் முகாம் தகர்ப்பு -**

தமிழீழத்தின் நெஞ்சத்தின்மீது குந்தியிருந்த பக்கத்து நாட்டுப் படைகளைக் குடியெழுப்ப நிகழ்த்தப்பட்ட தாக்குதல். இரண்டாவது தடவையாகவும் -நிச்சயமாக இறுதியானது எனவும் முடிவுசெய்யப்பட்ட சமர்-

முதல்நாள் - நள்ளிரவுக்குச் சற்று முன்னர் ஆரம்பித்த சண்டை, மறுநாள் விடிந்து மதியமாகியும் நடந்துகொண்டிருந்தது தென்முனை முற்றாகவே எதிரிக்குச் சாதகமான பிரதேசம். அது வயல்வெளி; அங்கு அவனது கைதான் ஓங்கியது. கூடுதலான இழப்பைச் சந்தித்ததால், எங்கள் தாக்குதலணி காலையிலேயே பின்னால் எடுக்கப்பட்டுவிட்டது. தென்முனை வழியான தாக்குதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

வடமுனையில் தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து எதிரி தடுத்து நின்றும், அவனது அரண்களையும், மினிமுகாம்களையும் உடைத்துக்கொண்டு முன்னேறிய புலிகளின் அணி, பிரதான முகாமிற்கு அருகில், 'ஹெலி' இறங்கு தளத்தில் - கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. எதிரி, தனது பலமான அரணொன்றிலிருந்து மூர்க்கத்தனமாக மோதினான்; தனது முழுப் பலத்தையும் திரட்டிச் சண்டையிட்டான்.

ஏனெனில், 'ஹெலி' இறங்கு தளம் யாருடைய கைக்குப் போகின்றதோ அந்தப்பக்கம்தான் வெல்லும். அவனிடம் போய்விட்டால் உதவி எடுத்து புத்துயிர் பெற்றுவிடுவான்; எங்களிடம் வீழ்ந்துவிட்டால் தனித்துவிடப்பட்டுக் குற்றுயிர் ஆகிவிடுவான். எனவே எதிரி இறுதி முயற்சியாக மோதினான் உயிர் பிரிகிற நேரத்தில் ஒரு அசுர பலம் வருமாமே, அந்தப் பலம் கொண்டு தாக்கினான்.

சண்டை உக்கிரமடைய அடைய, எங்கள் தாக்குதலணி பலவீனப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் நாங்கள் கைவிட முடியாது; ஹெலித்தளத்தை விட்டுச் சற்றுப் பின்னால் வந்தால்கூட, நாங்கள் தோல்வியடைந்ததுக்குச் சமம். எதிரி நிலத்தோடு மட்டுமே மோதினான்; நாங்களோ வானத்தோடும் மோத வேண்டியிருந்தது. நேரம் நீள நீள எங்கள் கை சோர்ந்துகொண்டு போனது. அவனா? நாங்களா? என்ற நிலை. சண்டையை நடத்திக்கொண்டிருந்த தளபதி, நிலைமையின் இக்கட்டைப் பிரதான கட்டளையகத்துக்குச் சொல்லிக்கொண்டேயிருந்தான். கைவிடமுடியாது; ஏற்கெனவே இந்த முகாமை அழிப்பதற்காக நாங்கள் செலுத்திவிட்ட விலை பெறுமதியானது; திரும்பவும் ஒரு தடவை அற்புதமான உயிர்களைக் கொடுக்க முடியாது. துவங்கியதோடு அடித்துத்துடைத்து முடித்துவிடவேண்டும்; இனி விட இயலாது.

கடைசி வழிமுறை ஒன்றைக் கையாள கட்டளைப்பீடம் முடிவு செய்தது. கைவசம் வைத்திருந்த, தேர்ச்சிபெற்ற வீரர்களைக் கொண்ட மேலதிக தாக்குதலணி ஒன்றை - நுட்பமான ஒரு தந்திரோபாயத்தோடு பிரயோகித்து ஒரு இறுதி எத்தனிப்பைச் செய்வதே அது. அவனா? நாங்களா? என்ற எதிர்பார்ப்புக்கு விடை தரப்போகும் அடி; அந்த வரலாற்றுத் தாக்குதலின் வெற்றியை நிர்ணயிக்கப்போகிற அதிரடி. இதன் முக்கியத்துவம் முக்கியமானது.

ஹெலித்தளத்தில் சண்டையிடும் எதிரியை கிழக்குத் திசை வழியாக மேலால் மேவி வளைத்து, அவனை வலது பக்கத்தால் நெருங்கி, அறைந்து நொருக்கவேண்டும். வான் ஆதிக்கத்தைத் தனது கையில் வைத்திருப்பவனின் கண்களுக்கு மண் தூவி - நில ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளப் போரிடுகின்றவனின் பார்வையில் பட்டுவிடாமல் - அவனை அண்மிப்பது என்பது, அந்த உச்சி வெயில் பகலில் ஒரு இமாலயக் காரியம். எதிரியை எதிர்கொள்ளும் நேரம்வரை, தன்னைச் சேதப்பட்டுவிடாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அந்த அணிக்கு உண்டு; தோல்வியைத் தழுவும் நிலையிலிருந்து அந்தத் தாக்குதலை மீட்கவேண்டிய பொறுப்பும் அதற்குத்தான் உண்டு.எனவே, அந்தச் சிக்கலான சூழ்நிலையிலும் சரியான முறையில் நகர்த்திச்சென்று, சரியான நேரத்தில்- சரியான இடத்தில் - தாக்குதலைத் தொடுத்து, அந்த அணியை வழிநடாத்தக் கூடிய திறமை. அதன் கொமாண்டருக்கு இருக்கவேண்டும். அணியின் தளபதியாகி நகரத் துவங்கியவன் நவநீதன்.

தாக்கிக்கொண்டிருந்த எமதணி தளர்ந்துகொண்டிருந்த வேளை, அனுப்பிவைத்த தளபதி காத்திருந்த நேரம், என்ன முடிவோ என நாங்கள் ஏங்கி நின்ற பொழுது- மூர்க்கங்கொண்ட புலிகளாய் பாய்ந்தனர் வீரர்கள். ஆக்ரோசமான தாக்குதல் தடைகள் உடைந்து, தானை சிதைந்து, பகைவன் சின்னாபின்னமாகிப்போக - புதிய தெம்புடனும், புதிய வேகத்துடனும் பிரதான முகாமைக் குறிவைத்தனர் புலிகள்

எங்கள் கதாநாயகனுக்கு வெடி; இடுப்பு எலும்பை நொருக்கிச் சென்றுவிட்டது சன்னம். காலுக்கு மணல் மூடை கட்டித் தொங்கவிட்டு, யாழ்ப்பாணம் மருத்துவமனையில் படுத்திருந்து, ''இந்தச் சுமையின் வேதனையைவிட, மாங்குளத்தை வென்றதே மனதுக்கு மகிழ்வு'' என்றவன், 7மாதங்களுக்குப் பிறகு எழுந்து நடக்கத் துவங்கிய போது, இடதுகாலில் ஒரு அங்குலம் கட்டையாகிப்போயிருந்தது.

**முல்லைத்தீவில்ஒருபடையெடுப்பு-**

நவநீதன் அப்போது முல்லைத்தீவு மாவட்டத்திற்குத் தளபதி; லெப்ரினன்ட் கேணல் நரேசுக்குத் துணைவனாய் நின்று, நிர்வாக வேலைகளை ஒழுங்கமைதுக் கொண்டிருந்தான்.

தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்காக தளபதி தீபனும், நரேசும் எமது படையணிகளை எடுத்து வேறு ஒரு இடத்திற்குக் கொண்டு சென்றிருந்தவேளை, 'சத்பல' என்று பெயர் சூட்டிக்கொண்டு முல்லைத்தீவிலிருந்து படையெடுத்தான் எதிரி; ஆயிரக்கணக்கான துருப்புக்கள், யுத்த வானூர்திகள் பலம் சேர்க்க பெருமெடுப்பில் முன்னேறத் துவங்கினர்.

ஆனால் காவலரணில்இருந்ததோ சண்டைக்குத் தேர்ச்சி பெறாத போராளிகள். சண்டை செய்யக் கூடியவர்கள் என்று எவருமே இல்லை. இருந்தவர்களைத்தான் பொறுக்கி எடுத்து அனுப்பியாகிவிட்டதே. இருப்பவர்கள் சண்டைக்கு அனுபவப்படாதவர்கள்; புதியவர்கள்.

அவர்களை வைத்துக்கொண்டு, எதிரி முகாமின் வாசலிலேயே களத்தைத் திறந்தான் நவநீதன்.

ஒரு முழுநாள் - 'நவநீதன் சண்டையைச் செய்வித்தான்' என்பதைவிட, 'நவநீதன்தான் சண்டை செய்தான்' என்றுதான் சொல்ல

வேண்டும். திரண்டு நகர்ந்த அந்நியச் சேனையை, திறமையுடனும்-துணிவுடனும் தடுத்துத் தாமதப்படுத்தினான் அந்தப் போர்வீரன். மறுநாள் எமது படைப்பிரிவுகள் வந்துசேருகின்றபோது, தந்திரமாகச் சண்டையிட்டு, திரண்டு நகர்ந்த பகைவர்களை அவன் தடுமாற வைத்திருந்தான். அந்த முதல்நாள் சண்டையில் தங்களில் 6 பேர் கொல்லப்பட்டதாக சிறீலங்கா வானொலி அறிவித்தது.

“இனியாவது என்ர றொபடியனைவீட்டை விடுவியளே?” என்று கேட்காத, கேட்க நினையாத- “எப்ப தம்பி எங்களுக்குச் சுதந்திரம் எடுத்துத் தரப்போறியள்?” என்று மட்டும் மனதாரவே ஆதங்கப்படுகின்ற - ஒரு தமிழன்னையின் மடியில், அந்தப் பூ முகையவிழ்ந்தது. அது - 1969 ஆம் ஆண்டு, நொவெம்பர் 12 ஆம் நாள். திருலோகநாதன் என்று திருநாமம் சூட்டினார்கள்.

“குவா......குவா......!” சத்தத்தோடு, அந்தக் குழந்தை - தவழ்ந்து, உருண்டு, மண்ணளைந்து, தத்தித் தடுமாறி எழுந்து நடக்கத் துவங்கிய அந்த ஓலைக் குடிசையில், அவனுக்கு முன்னமே ஏழ்மை பிறந்துவிட்டது. நிரந்தரத் தொழில் இல்லை. நிலபுலங்கள் எதுவும் இல்லை. இரண்டு நேரம் சாப்பிடககூட வழியில்லை; வறுமை.

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்தவன், 7ஆம் வகுப்போடு - குடும்பத்தின் ஏழ்மைச் சிலுவைக்குத் தோள் கொடுக்க, வீட்டில் நின்றுகொண்டான். இருந்தாற்போல் ஒருநாள் - திடீரென, அப்பா தில்லையம்பலத்தார் மீளாத் துயில் கொண்டுவிட்டபோது, துன்பமும் ஏழ்மையும் சேர்ந்து அழுத்திய பெருஞ்சுமைக்குள் அந்தக் குடும்பம் சிக்குண்டது; வதங்கியது.

இத்தகைய - துயர்படிந்த ஒரு குடும்பப் பின்னணியிலிருந்து, அவன் போராட்டத்துக்கு வந்தபோது, அவனுக்கு 16 வயது.

தளபதி பசிலனின் அரவணைப்பில் அந்தச் சின்னப் போராளி வளரத் துவங்கினான்.

அவனுக்குப் போர் ஆசானாகி நின்ற, அவனது போராட்ட வாழ்வின் ஆரம்பத்தை வழிப்படுத்திவிட்ட குரு, அவர்தான்.

துப்பாக்கிகள் தந்து, சிறந்த வீரர்களுக்கு நிகரானவனாகச் சுடப்பழக்கி, பயிற்சிகள் வழங்கி - அந்தச் சின்ன வயதிலேயே, நவநீதனுக்குள் மாபெரும் வீரத் தன்மைக்கு வித்திட்ட பெருமை, பசிலனையே சாரும்.

தளபதி பசிலனின் மெய்ப்பாதுகாவலனாக, ‘எம் 16’ உடன் கூடத்திரிந்த நாட்கள், அவனுக்குள் ஆழப்பதிந்த நினைவுகள்; அந்தக் காலத்தில் அவர் சொல்லித்தந்த சண்டை முறைகள், மறத்தலற்ற மனப்பாடங்கள்.

நவநீதன் பகைவரைச் சந்தித்த முதற்களம் என்று குறிப்பிடக்கூடியது, முந்திரிகைக்குளம் தாக்குதல்.

மணலாற்றில் சிங்களக் குடியேற்றத்துக்கு விழுந்த பலமான முதல் அடி அது. அந்தப் பெருவெற்றியைப் பெற்றுத் தந்தவன் பசிலன். அப்போது - ‘கென்ற்’, ‘டொலர்’ பண்ணைகளில் மட்டுமே தொற்றியிருநத அந்த விசக்கிருமிகள், பல்கிப் பெருகி மணலாற்றில் படரத் துவங்கிய பிரதான அசைவுப் பாதையை, பதவியாவிலிருந்து மேற்குக் கரை நோக்கி காட்டினூடு அமைத்துக் கொண்டிருந்த இராணுவ அணியே தாக்கப்பட்டது.

வியூகம் அமைத்துநின்று, தளபதி பசிலன் தாக்குதலை நடாத்தியபோது- அவரது நிழலாக நின்று பொறி கக்கினான் நவநீதன். கொல்லப்பட்ட 20 வரையான படையினரில் சிலரது உடல்களில், அந்தச் சின்ன வீரனது துப்பாக்கிதான் கோலம் போட்டதாம் ... சண்டை முடிந்தபோது புலிகள் இயக்கத்தின் ஆயுத இருப்பில் 12, ‘ரி56’கள் கூடியிருந்தன; சிங்களக் குடியேற்றத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், திட்டத்தின் அந்தப் பிரதான அசைவுப் பாதை, நிரந்தரமாகவே கைவிடப்பட்டது.

இந்தியப் போர் ஆரம்பித்தபோது -

இந்தியப் படையின் ‘புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமரில்’, கோப்பாய்ச் சண்டை எமது முல்லைத்தீவு மாவட்டப் படையணியால் எதிர்கொள்ளப்பட்டது. தளபதி பசிலனின் அந்த அணியில் நவநீதனும் களத்தில் நின்றான். இந்தியர்களின் இரண்டு ‘B.M.P ராங்க்’குகள் நொருக்கப்பட்டதுடன், அங்குலமும் அசையாமல் தடுத்துநிறுத்தப்பட்ட. அந்த நாட்கணக்கான சண்டையில், சொல்லிக்காட்டக் கூடியளவு திறமையுடன் நவநீதன் போரிட்டான்.

கோப்பாயில் சண்டையை முடித்துக்கொண்டு திரும்பிய படையணி, முல்லைத்தீவில் போர் அரங்கைத் திரைநீக்கம் செய்தபோது -

துயரம்! கொடுந்துயரம்; முல்லைத்தீவில் ஒரு சண்டைக்களத்தில், மாபெரும் வீரன் பசிலன் வீழ்ந்துபோனான்; முல்லை மண் துடித்தது. அதன் மடியில் பிறந்த குழந்தை அவன்: அந்த மண்ணின் வரலாற்றில் பொறிக்கப்பட்ட தளபதி அவன். நவநீதன் கலங்கினான்; கதறினான்; அவனால் தாங்க முடியவில்லை.

அடிபட்ட நாகமாய் அலையத் துவங்கினர் புலிகள். பதிலடி கொடுக்க பகலிரவாய்த் திரிந்தவர்களிடம் வசமாகச் சிக்கியது ஒரு இந்திய அணி - பசிலனை எம்மிடமிருந்து பிரித்தது இதே அணிதான் என்பது முக்கியமானது- தண்ணீரூற்று வித்தியானந்தாக் கல்லூரிக்குப் பின்னால், தளபதி பால்ராஜின் தலைமையில் எம் இரண்டு அணிகள். ஒன்றுக்குக் கொமாண்டர் போர்க்; அடுத்ததுக்கு நவநீதன். மூர்க்கத்தனமான சண்டை. நவநீதனின் நெஞ்சுக்குள் பசிலனண்ணனின் நினைவுகள் கனன்றன. பகைவர்களை நெருப்பெனச் சுட்டெரித்தான் அந்த வீரன். இந்தியரின் முதலாவது குழு தாக்கியழிக்கப்பட்ட பின்னர், மீட்கவந்த அடுத்த குழு தாக்கப்பட்டது. 25 பேரளவில் கொல்லப்பட்ட சண்டையில், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுள் இரண்டு பிறண் எல். எம். ஜிகள்.

இந்தியர்கள் ‘ஒப்பரேசன் செக்மேற்’றை நடாத்திக்கொண்டிருந்தார்கள்.

பெரும் போர்களைக் கண்ட, உலகின் 4ஆவது பெரிய தரைப் படையின் 30,000 துருப்புக்கள் எங்கள் விடுதலைப் போராட்டத்தின் மையக் கருவைக் கிள்ளியெறிய நகர்த்தப்பட்ட வரலாற்றுச் சமர்; பிரசித்திபெற்ற மணலாற்றுப் படையெடுப்பு.

குமுழமுனை மலைமுகாம் என்ற இந்தியத் தளம்தான் ‘செக்மேற்’றின் மையம்: கட்டளைப்பீடம்: உயர் தளபதிகள் தங்கியிருந்து ‘பிரபாகரனைக் கொல்லும்’ போரை நெறிப்படுத்திய தலைமையகம். இந்த முகாமில் ஒரு தாக்குதலைச் செய்வதன்மூலம், ‘செக்மேற்’றுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்கவும், இந்தியரின் கவனத்தைத் திசைதிருப்பவும் திட்டமிடப்பட்டது. ஒரு புலர்வுப் பொழுதில், அந்த முகாமின் தலைவாசலைத் தாக்கினர் புலிகள். யேஜர் கிண்ணிக்குத் துணைக் கொமாண்டராய்ச் சென்று வெற்றியைப் பெற்றுவந்தவன் நவநீதன். எதிர்பாராத மையத்தில் விழுந்த அதிரடி - புலிகள் கொடுத்த நெற்றியடி. இந்தியத் தளபதிகள் குழம்பிப் போயினர். செய்வதறியாது திகைத்தனர். படை நகர்த்து முன்னர், நகர்த்தும் பீடத்தைப் பாதுகாக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு ‘செக்மேற்’ நிறுத்தப்பட்டது. தங்கள் இலக்கு மீது இந்தியர்கள் கொடுத்த நெருக்கடி தளர்ந்தது. இந்த வெற்றியில் நவநீதனுக்கும் பெரும் பங்குண்டு.

நவநீதனைப் பற்றிச் சொல்வதானால் - சண்டையில்தான் ஆரம்பிக்கவேண்டும்: சண்டைகளால் தொடரவேண்டும்: சண்டையொன்றில் முடிக்கவேண்டும்.

அவனது சண்டைகளை விளக்குவதன்மூலம்தான் அவனை வர்ணிக்கமுடியும்.

போர்தான் அவனுடைய ‘தனிச் சிறப்புக் கலை’

போரில்தான் அவன் ‘துறைசார் வல்லுனன்’.

எங்கள் இயக்கத்தில் தலைசிறந்த சண்டை வீரர்கள் என்று தேர்ந்தெடுத்தால், நவநீதன் தவறமாட்டான்.

எதிரிகளை எதிர்கொள்ளும் வேளைகளில், எல்லோரையும் மேவி முன்னால் நின்று - அவனுடைய துப்பாக்கி தீ உமிழும்.

கணப்பொழுதுக்குள் எதிரியின் மூச்சுப்படும் தூரத்துக்கு நெருங்கி, அவன் சுழன்றடித்துச் சுட்டு வீழ்த்தும் லாவகம் - மெய் சிலிர்க்க வைக்கும்.

அவனொரு ‘Quick Gunner’ - ‘மின்னல் வேகத் துப்பாக்கி வீரன்.’ பொருதுகளங்களில், எதிரி காணுமுன் எதிரியைக்கண்டு, துப்பாக்கியைப் புயலின் வேகத்தில் இயக்குவான். அந்த வேகத்திலும், குறி பிசகாமல், நிதானமாகக் குறி வைக்கும் வல்லமை, அவனது தனி ஆற்றல்.

அவனது சண்டைகள் பார்ப்பவர்களை வியக்கவைக்கும்; சண்டை தெரிந்தவர்களைக்கூட ஆச்சரியப்படுத்தும்.

சமர்க்களங்களின் நடுவில் சிக்கலான சூழ்நிலைகள்பிறக்கும்போது, மதிநுட்பம்வாய்ந்தவிதமாக முடிவெடுத்து - எச்சரிக்கையாகவும், அவதானமாகவும் செயற்பட்டு - இடையூறுகளை வெற்றிகரமாகச் சமாளிததுவிடும் திறமை மிக்கவன் அந்தத் தளபதி.

போர்வீரர்கள் இரண்டு வகையானவர்களாகக் காணப்படுவார்கள். ஒருவகை - குழுச்சண்டை வீரர்கள். அடுத்தவகை - தனிச் சண்டை வீரர்கள். குழுச்சண்டையானது படையாட்கள் எல்லோர்க்கும் பொதுவானது. யுத்தப் பயிற்சிபெற்ற எல்லோருமே செய்யக்கூடியது. ஆனால் தனிச்சண்டை அப்படியானதல்ல; அதற்குத் தனித்தன்மையான நிபுணத்துவம் தேவை. குறிப்பிட்ட சிலர்தான் அதில் வல்லவர்களாக இருப்பார்கள். நவநீதன் ஒரு தனிச்சண்டைக்காரன். நூற்றுக்கணக்கான வீரர்களைக் கொண்ட ஒரு சேனையை தனித்து நின்று எதிர்கொள்ளக்கூடிய மனத்துணிவும், புத்திக் கூர்மையும், செயற்திறனும் அவனிடம் உண்டு.

போரன்றி வேறேதும் நினையாத புலிவீரன் அவன். பயிற்சியைப் பற்றியும், வேவைப்பற்றியும், ஆயுதங்களைப் பற்றியும், சண்டையைப் பற்றியுமே அவன் பேசிக்கொண்டிருப்பான். தூக்கத்தில் வருகின்ற கனவுகள்கூட அவனுககுக் கள நிகழ்வுகளாகத்தான் இருந்திருக்கும்.

எல்லாப் போராளிகளுமே அவனோடு சண்டைககளத்துக்குப் போக விருப்பப்படுவார்கள். அவர்களுக்கெல்லாம் அவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். இயக்கத்தின் உயர் தளபதிகளினதும் அதீத நம்பிக்கைக்குப் பாத்திரமான போராளியாக அவன் திகழ்ந்தான். தனது செயல்களாலே அவன் வளர்த்துக் கொண்ட நம்பிகைகை அது. ஆம், செயலால் மட்டும்.

சமர் அரங்கொன்றின் பின்முனையிலிருந்து நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கும் கட்டளைத் தளபதி, சண்டை சிக்கல்படுகின்ற சில சூழ்நிலைகளில், “இந்த நேரத்தில் எப்படிச் செய்ய வேண்டும்” என நினைக்கின்றாரோ, சண்டையின் முன் முனையில் வழிநடாத்தும் நவநீதன் அப்படியே செய்து முடிப்பான். அந்த அளவுக்கு, போர்பற்றிய அறிவை- ஞானத்தை-அவன்பெற்றிருந்தான்.

கட்டையாகிப்போன காலைப் பற்றி அவன் கருத்திலெடுப்பதேயில்லை. சண்டைகளில் அவன் முன்னுக்கு ஓடித்திரிந்து தாக்கும்போதும், தாக்குதல்களுக்காக நாங்கள் நீண்ட தூரத்திறகுச் செல்லவேண்டுமானாலும் - மனஞ்சோராமல் உற்சாகத்தோடு நடக்கும்போதும், அவன் தனது மனவுறுதியைக்காட்டுவான்; அது வியப்பைத் தரும்.

நவநீதன் அன்பானவன். மிக அமைதியானவன். மென்மையான சுபாவத்தைக் கொண்டவன்.

“நவநீதன் பேசிப்போட்டான்” என்று, யாருமே சொல்லாத அளவுக்குப் பண்பானவன்.

அவன் அதிகம் கதைக்கமாட்டான் - இடைக்கிடை பகிடி சொல்லுவான்: மற்றவர்களது மனங்களை நோகவைக்காமல், எப்போதாவது யாரையும் கிண்டல் செய்வான். அவ்வளவோடுசரி.

நிர்வாக வேலைகளைச் செய்யும்போது வளைந்துகொடுத்து, எல்லோரையும் சமாளித்து, விடயங்களை ஒப்பேற்றிவிடுகிற திறமையைக் கொண்டவன். எல்லா வகையான மனப்போக்கு உடையவர்களும் ஏற்றுக்கொள்ளும்படியாக நடந்துகொள்ளும் பக்குவம் மிக்கவன்.

எப்போதும் ஒரு அப்பாவித்தனம் அவனது விழிகளில் மிதக்கும்.

எப்போதும், ஒரு குழந்தைத்தனம் அவனது முகத்தில் குடியிருக்கும்.

எங்கள் நெஞ்சுகளுக்குள் பொந்து அமைத்து வாழ்ந்த மாடப்புறா அவன்.

பகைவர்களுக்கு முன்னால் யுத்த சன்னத்தனாகி நெருப்பென நிற்கும் அந்த வீரன், எங்களுக்குள் - பனிநீராய்ப் படர்ந்து குளிர்மையாக வருடுகின்ற நண்பன்.

எவ்வளவு ஆற்றல்கள் அவனுக்குள் குவிந்து கிடந்தன! எத்துணை திறமைகளின் ஒட்டுமொத்த வெளிப்பாடாக அவன் உலா வந்தான்! ஆனாலும் அவன் வெளியில் மிளிராத போர்வீரன்; தன்னைப் பிரபல்யப்படுத்திக் கொள்ள விரும்பாத விடுதலைப் புலி. இலைமறைகாயாக இருந்து, பிரளயங்களைப் படைத்துக்கொண்டிருந்த பிரபாகரனின் பிள்ளை.

இறுதிக்காலத்தில் சண்டைகளுக்குப் பின்னாலேயே அவன் வைத்திருக்கப்பட்டான். ஏற்கெனவே ஏராளமான சண்டைகளுக்குள் நின்றவன்; மாங்குளத்தில் வெடி வாங்கி காலைச் சின்னதாக்கிக்கொண்டவன். சண்டைகளில், அவன் பயன்படுவதைவிட, அவன் பட்டறிந்து பெற்றிருக்கும் அனுபவம் மிகுந்த பயன்பாட்டைத் தரும். எனவேதான், இயக்கத்திற்காகவும் அவனுக்காகவும் சமர்களின் பின்முனையிலேயே அவன் வைத்திருக்கப்படுவான். ஆனாலும், பின்னுக்கே நின்று ஒழுங்குகளைச் செய்துகொண்டிருப்பவன், சண்டை வெடித்த அடுத்த நிமிடங்களில் முன்னுக்கே தான் போய்விடுவான்.

புலோப்பளைச் சண்டையைப் பாருங்கள். அதில் அவனது பங்கு முக்கியமானது; குறிப்பிடத்தக்கது.

பூநகரிக்குப் படையெடுக்க நாங்கள் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோதுதான், எதிரியானவன் யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்தான்.


ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து ஆரவாரமான ஏற்பாடுகளுடன் ‘யாழ்தேவி’ புறப்பட்டவுடனேயே நவநீதனது குழுதான் அங்கு அனுப்பப்பட்டது.

பகைவர் சேனைக்கு வாசலிலேயே வரவேற்புக்கொடுக்க அல்ல; அவர்களின் அசைவுகளை அவதானித்துத் தகவல் சொல்ல மட்டும்.

ஒரு படையெடுப்பை முறியடிக்க முனையும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் போர் வியூகமாகும். எமது படைவீரர்களை சரியானதோர் வியூகமமைத்து நிறுததிவைக்கும் போது

(11ஆம் பக்கம் பார்க்க)

# கல்வியும் புலிகளும்



**"இன்று நாம் ஒரு போர்ச் சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில் எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமான சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது, எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்."**

*இவ்வாறு தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியை முன்னிட்டு தலைவர் வே. பிரபாகரன் விடுத்த செய்தியில் கூறியுள்ளார். அவரது செய்தியினை முழுமையாகக் கீழே தருகிறோம்.*

மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்துகொண்டிருக்கிறது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சிகண்டு உலகத்தின் வளர்ச்சிப்போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்திவருகின்றன. இந்த வளர்ச்சிப்போக்கின் தாக்கத்தினால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகிறது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல், தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்புநோக்குகையில், எமது தேசத்தின் கல்விநிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கிறது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்து விடச் சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முனைந்துவருகிறது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்குக் காலம் தமிழரின் கல்வியைச் சீர்குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்த கல்வி அழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக, எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில், எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக்கு உட்பட்டதாக, சில ஆக்கவேலைகளைச் செய்து வருகிறது. பெரியதொரு போருக்கு முகங்கொடுத்தவாறு, சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலைவேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலைபெற்று, நிலையான அமைதியும் உறுதியான அரசும் தோன்றும்பொழுதுதான், நாம் சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்குக் கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன்பேணும் வகையில் பாடுசெய்ய முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை, நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புகளையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின், நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்கவேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சியமாக வரித்துக்கொண்டு நாம் போராடுகிறோம்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயரிய நோக்குகளையும் இலக்குகளையும் மாணவ சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வை வளர்த்து, மாணவரிடையே தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்த, ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டும். தேச விடுதலை என்பது, எல்லோரது விடுதலையையும் விடிவையும் குறித்து நிற்கும் ஒரு பொதுவான குறிக்கோள்; ஒரு தேசிய இலட்சியம். இந்த இலட்சியத்தில் எல்லோரும் பற்றுக்கொள்ளும்பொழுதுதான் தமிழரின் சுதந்திர இயக்கம் வலுமிக்க சக்தியாக உருப்பெறும்.

இன்று நாம் ஒரு போர்ச் சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமான சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் 1992 இல் தொடங்கப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு, இம்முறையும் சிறப்புற நடைபெற்றுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தேர்வுக்காகப் பல்வேறு வகைகளிலும் உழைத்த அனைவரையும் பாராட்டுவதோடு, இத்தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் உச்சப் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்குவதில் மட்டற்ற மகிழ்வுகொள்கிறேன்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# வெளிநாடு சென்ற தமிழர்கள் அவலம்; தஞ்சமடைந்தோரை திருப்பியனுப்ப முயற்சி

வெளிநாட்டவர்களது வருகை ஐரோப்பிய தேசத்தவர்களுக்கு இப்போது கசந்துவிட்டது. இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி என்ற வரிசையில் வெளிநாட்டவர்களது வருகைக்கு எதிராகக் கடும்நடவடிக்கை எடுத்துவரும் நாடுகளுடன், இப்போது சுவிற்சர்லாந்தும் சேர்ந்துகொண்டுவிட்டது அண்மைக்காலத்தில் அதிகளவு ஈழத் தமிழர்களைத் தன்வசம் ஈர்த்து, தமிழ்மக்களுக்கு ஒரு நம்பிக்கையான புகலிடமாகத் திகழ்ந்த சுவிஸ்தேசமும் பத்திரகாளி வேடம் பூண்டுள்ளது. தமிழர்கள் சார்பில் எவருடனும் கலந்தாலோசிக்காது சுவிஸ் அரசு, சிறீலங்கா அரசுடன் ஒரு உடன்பாடுகண்டுள்ளது. அதன்படி 'மே'மாத இறுதிப்பகுதியில். தனது நாட்டில்தஞ்சமடைந்துள்ள தமிழர்களில் 12000 பேரை இலங்கைக்குத் திருப்பியனுப்ப முடிவெடுத்துள்ளது. இந்த உடன்பாடு கடந்த ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் கூறியுள்ளன.

அளவுக்கு அதிகமாக ஈழத்தமிழர்களை உள்வாங்கிக்கொண்ட சுவிஸ் அரசு, இப்போது கடுமையாக நிற்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் 'தமிழர்கள் திருப்பியனுப்பப்படக்கூடியசூழல் சிறீலங்காவில் இப்போது நிலவுகின்றது' என்று சுவிஸ் அரசின் பிரதிநிதி கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கூறியிருப்பதுதான், அதிர்ச்சியையும்-வருத்தத்தையும் தருகின்றது.

இனப்பிரச்சினையே இல்லையென்று இடக்காகப்பேசி. புலிகளுடன் ஒரு சமரசத்துக்குச் செல்லமறுத்து, போரையே நாடிநிற்கும் பேரினவாத வெறிபிடித்த விஜேதுங்காவின் ஆட்சியில் உகந்த சூழல் நிலவுகின்றது' என்ற சுவிஸ் அரசின் நிலைப்பாடு, தமிழீழ மக்களுக்கு வேதனையைத் தவிர வேறெதைக் கொடுக்கமுடியும்.

பொதுவாக ஐரோப்பிய தேசங்கள், வெளிநாட்டவர்கள் புகும் கதவுகளை இறுகச் சாத்தத் தொடங்கிவிட்டன. அளவுக்கதிகமாக அந்தநாடுகளில் வெளிநாட்டவர்கள் போய்க் குவிவது, அந்த நாடுகள் மத்தியில் பாரிய சமூக-பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளன. அதுவும் அரசியல் தஞ்சம் என்ற போர்வையில் தொழிலதேடிச் செல்லும் வெளிநாட்டவர்களால், அந்நாடுகள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. இவர்களால் சட்டம்-ஒழுங்கு சீர்குலைக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு ஒருபுறமும், ஐரோப்பிய இளைஞர்களது வேலைவாய்ப்புகள் மற்றும் அவர்களது நிம்மதி பறிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் மறுபுறமுமாக, வெளிநாட்டவர்களுக்கெதிரான துவேசம் அங்கே தலைதூக்கியுள்ளது. மேற்கு நாடுகளில் மீண்டும் புத்துயிர் பெற்றுவரும் பாசிசவெறி இதற்கு ஒரு முக்கியகாரணம் என்பதையும் மறுக்கமுடியாது.

ஈழத்தமிழர்கள் திருப்பியனுப்பப்படக்கூடிய சூழல் சுவிற்சர்லாந்தில் மட்டுமதான் தோன்றியிருக்கின்றது என்றில்லை: சுவிஸ் அரசானது இந்த விடயத்தில் மற்றைய ஐரோப்பியநாடுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழப்போகின்றது என்பதே உண்மையாகும்.

இந்த நாடுகடத்தல் பணிக்கு ஒரு சர்வசேத அங்கீகாரத்தைப் பெற்றுவிடும் நோக்கில் சுவிஸ் அரசானது, யூ. என். எச். சி. ஆர். இன் உத

(11 ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் துரைராசாவுக்கு தலைவர் புகழ்மாலை:

# அகத்தின் அழகும், எளிமையும், இனிமையும் கலந்த மனிதர்!



யாழ். பல்கலைக்கழகத்தில் 6 வருடங்கள் உபவேந்தர் பதவிவகித்த பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு சிறந்த கல்விமான் என்பதுடன், சிறந்த இனப்பற்றாளரும் ஆவார். உபவேந்தர் பதவியை திறம்படவகித்தபடி, இந்தப் போர்ச் சூழ்நிலையிலும் தமிழீழ மண்ணுக்கு அவர் ஆற்றிய சேவை மகத்தானது. சூடாநாடு அவருக்கு அளித்த கௌரவம் அவரது சேவையின் மகத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரமாகும்.

பொறியியல் துறையில், கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் 'மண்ணின் பொறிமுறையியல்' என்ற விடயத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற பேராசிரியர் அவர்கள், இத்துறையில் மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். இந்த ஆராய்ச்சியில் ஒரு புதிய கருதுகோளை பேராசிரியர் கண்டறிந்தார். பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழகங்கள் உட்பட உலகின் பல பல்கலைக்கழங்களின் பொறியியல் பீடங்கள் அவரின் புதிய கருதுகோளை அரவணைத்தன. 'துரையின் கருதுகோள்' [Thurai's Theory] என்று பெயரிட்டழைக்கப்படும் பேராசிரியரின் கண்டுபிடிப்பு, கட்டட பொறியியல் தொழில்நுட்பத் துறையில் புதிய அணுகுமுறையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பேராசான், தேசியப்பற்றுடன் எமது இனத்தின் செல்வங்களான மாணவ சமூகத்தின் கல்விமேம்பாட்டுக்காக உழைத்ததுடன், தமிழ் மண்ணிற்கும் சேவை பல புரிந்துள்ளார். இந்த வகையில் அவர் எமது இனத்தின் ஒரு பேறுடைச்சொத்து என்பதில் ஐயமில்லை.

இத்தகைய பேராசான் யாழ். பல்கலைக்கழகத்தை விட்டு மாற்றலாகிச் செல்லும் வேளையில், தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களும் அவருக்குக் கௌரவம் செய்து சிறப்பு விருது சூட்டி, பாராட்டுரை வழங்கியமை பேராசிரியரின் தன்னலமற்ற சேவைக்குக் கிடைத்த பெரும் புகழாகும். 02 04-1994 அன்று நடந்த பேராசிரியரைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றில் தலைவர் ஆற்றிய பாராட்டுரையைக் கீழேதருகின்றோம்.

என் அன்புக்குரியவர்களே,

சான்றோரைப் போற்றுவதும், கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு; எமது சீரிய பண்பாடு.

இந்தப் பண்புக்கமைய, பேராசிரியர் துரைராசா அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலைசிறந்த கல்விமான். உலகப் புகழீட்டிய அறிஞர். ஆறு ஆண்டுகளாக, யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தில் துணைவேந்தராகப் பதவியிலிருந்து, அவர் எமது மண்ணுக்கு ஆற்றிய சேவை மகத்தானது. அதற்காக ஈழத்தமிழ் உலகம் அவருக்கு என்றும் கடமைப்பட்டிருக்கும்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தேசப்பற்றாளர். அவர் இந்த மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்தார். அவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது; மக்களோடு இணைநதது. அவர் இந்த மண்ணினதும் மக்களதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார்; போராட்ட வாழ்வின் பளுக்களைச் சுமந்துகொண்டார்; போராடும் மக்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும், எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றிநிற்கும் எமது மக்களுக்குப் பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு ஊக்க சக்தியாக விளங்கினார்; தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கு ஒரு உன்னத உதாரணமாக விளங்கினார்.

எமது இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கல்வி ஆதாரமானது; எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அடித்தளமானது நீண்ட காலமாகவே, எமது கல்வி வாழ்வைச் சிதைத்துவிட எதிரியானவன் முனைந்து வருகிறான். இதனால, தமிழரின் கல்வி பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது.

சரிந்துகொண்டிருக்கும் எமது கல்வித் துறையை நிமிர்த்திவிடவேண்டும் என்ற இலக்கில், பேராசிரியர் துரைராசா அவர்கள் அரும்பாடுபட்டார்; எத்தனையோ இடையூறுகளுக்கும் மத்தியில் துணிந்து செயலாற்றினார். எதிரியின் போர் அழுத்தங்களாலும், அனர்த்தங்களாலும் யாழ்ப்பாண உயர்கல்விப்பீடம் செயலிழந்து போகாத வண்ணம் அவர் ஆற்றிய அருந்தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இது அவரது தேசப் பற்றிற்கும மக்கள் நேயத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பேராசிரியர் துரைராசா ஒரு எளிமையான மனிதர்; ஒரு இனிமையான மனிதர்; எளிமையும் இனிமையும இணைந்த ஒரு நல்ல மனிதர்.

அறிவின் அதியுயர்ந்த பண்பாகப் பிறப்பதுதான் எளிமை. தன்னலமும், தற்பெருமையும் அகன்ற நற்பண்பாக எளிமை தோன்றுகிறது. இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக ஆககி விடுகிறது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா ஒரு அழகான மனிதர். அவரிடமுள்ள இந்த அகததின் அழகுதான் மக்களைக் கவரும் மாண்பாக விளங்குகிறது.

அவரது நற்பணி தொடரவேண்டும் என்றும், அவர் நல்வாழ்வு வாழவேண்டும் என்றும் நான் மனமார வாழ்த்துகிறேன்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# ஜெயலலிதா அரசின் தீவிர ஈழத்தமிழர் எதிர்ப்புணர்வு

புலிகள் தடைச்சட்டத்தை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிகக வேண்டும் என்று மத்திய அரசைக்கோரும் தீர்மானம்ஒன்றை, ஜெயலலிதாவின் அரசு, தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றியுள்ளது.

ஜெயலலிதாவின் இந்த ஈழத் தமிழர் விரோதப்போக்கிற்கு, அவரது சுயநல அரசியல்தான் பிரதான காரணியாகும். தனது பதவியைக் காப்பாற்றிக்கொள்ளும் ஆசைக்கு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மீண்டும் ஒருமுறை அவர் பலிக்கடா ஆக்கியுள்ளார்.

1992 ஆம் ஆண்டு மே மாதம், இந்திய மத்திய அரசு, 'இரண்டாண்டுகள்' என்று காலவரையறை விதித்து புலிகள் தடைச்சட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் இவ்வாண்டு (1994) 'மே' மாதத்துடன் மத்தியஅரசுவிதித்த 'தடை' முடிவுக்கு வருகின்றது. ஆனால் புலிகள் தடைச்சட்டத்தை மேலும் நீடிக்கவேண்டும் என்பதில் - இந்திய மத்திய அரசு எடுக்கும் அக்கறையைவிட - ஜெயலலிதா அரசு காட்டும் தீவிரப்போக்கு, ஈழத் தமிழ்மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆத்திர உணர்வையும் கொடுத்துள்ளது.

தமிழ்நாட்டின் ஆளுங்கட்சியான அ. இ. அ. தி. மு. கவுக்கும் இந்திரா கொங்கிரஸ்கட்சிக்குமிடையில் நிலவிவந்த அரசியல்கூட்டு முறிவடைந்ததைத் தொடர்ந்து, ஜெயலலிதாவின் அரசைப் பதவியிறக்கும் பணியில் இந்திய மத்திய அரசு இறங்கியிருந்தது. இதன் ஆரம்பக்கட்டமாக தமிழ்நாட்டரசைப் பதவிநீக்குவதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்காக மத்திய அரசு, புதிய ஆளுநர் ஒருவரைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தது. புதிய ஆளுநருக்கும் [திரு. சென்னாரெட்டி] ஜெயலலிதா அரசுக்குப் இடையில்கருத்து மோதல்கள் வலுத்தன.

தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்றும், ஊழல் மலிந்து இலஞ்சப்பேய் தலைவிரித்தாடுகின்றது என்றும், தமிழ்நாடு இந்திரா கொங்கிரஸ் கட்சியினர் குற்றம் சுமத்தினர். தமிழ்நாட்டின் இந்த அவலநிலைக்கு ஜெயலலிதா அரசே காரணம் என்றும் அவர்கள் பிரச்சாரம் செய்தனர். எனவே ஜெயலலிதாவின் அரசைக் கலைத்து தமிழ்நாட்டில் சட்டம் -ஒழுங்கைப்பேணி-ஊழலை ஒழிக்கவேண்டும் என இந்திரா கொஙகிரஸ் கட்சியினர் ஆளுநரைக் கோரியிருந்தனர்.

இதேவேளை, புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் அதிகரித்துவிட்டது என்றும், ஜெயலலிதாவிற்கும் புலிகள் இயக்கத்திற்தும் இடையே உள்ள உறவுதான் இதற்குக் காரணம் என்றும், தமிழ்நாடு கொங்கிரஸ் கட்சித் தலைமை ஜெயலலிதாவைக் குற்றஞ் சாட்டியிருந்தது. புலிகள் இயக்கத்தைத் தொடர்புபடுத்தி ஜெயலலிதாவின் ஆட்சியைக் கலைப்பிக்கவேண்டும் என்பதுதான், தமிழ்நாடு கொங்கிரஸ்கட்சியின் நோக்கம். ஆனால், மத்திய அரசே புலிகளுடன் உறவு வைத்துள்ளது என்றும், தமிழ்நாட்டில் புலிகள் அழிப்பிற்கு அ. இ. அ. தி. மு. க. அரசுதான் பேருதவி புரிந்தது என்றும் பிரகடனம் செய்து, தன்மீதான குற்றச்சாட்டை ஜெயலலிதா மறுத்திருந்தார். அத்துடன்மட்டும் நின்றுவிடாமல், 'தஞ்சம்புகுந்துள்ள ஈழததமிழ்அகதிகளால் தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு சீர்குலைகின்றது; அவர்களைத் திருப்பியனுப்பவேண்டும்' என்று வெறிப்பிரச்சாரம் செய்ததுடன், நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

தமிழீழ மக்களைக் கொச்சைப் படுத்தி - அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமாக நடந்ததும் போதாதென்று, மேலும் ஒருபடி உயரே சென்று, 'புலிகள் தடைச் சட்டத்தை' நீடிக்க வேண்டும் என ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். இதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஜெயலலிதா மீண்டும் துரோகமிழைத்துள்ளார்.

புலிகள் தடைச்சட்டத்தை நீடிக்கத் தீர்மானம் நிறைவேற்றிய தன்மூலம், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கில் தனது அரசு அக்கறை கொண்டுள்ளது எனறு சொல்லிக்காட்டவும், தனது அரசைக் கலைப்பதற்குரிய ஆயுதமாக 'புலிகளின் நடமாட்டம்' என்ற காரணத்தை மத்திய அரசு பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காகவும், மத்திய அரசை முந்திக்கொண்டு தடைச்சட்ட நீடிப்புத்தீர்மானத்தை ஜெயலலிதா நிறைவேற்றியுள்ளார்.

இவ்விதம் ஒரு குறுகியவாத அரசியல் நோக்கில் தனதும் தனது கட்சியினதும் சுயநல அபிலாசைகளுக்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலிக்கடாவாக்கி வரும் ஜெயலலிதாவின் துரோகத்தனத்தை, தமிழீழ தேசியம் என்றும் மறக்கமாட்டாது.

# சமாதானம் ஏன் பிறக்கவில்லை!?

தென்மாகாண சபையில் ஆளுங்கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் பெருநம்பிக்கையுடன் வீசத்தொடங்கிய சமாதானக்காற்று,நாளடைவில் சந்தடியில்லாமலேயே மறைந்துவிட்டது. இப்போது பெரும் போர்ப்புயல் வீசுவதற்குரிய சாத்தியக் கூறுகளே பெரும்பாலும் காணப்படுகின்றது.

இது ஏன்? இதற்கு என்ன காரணம்?

கடந்த 17 வருடங்களாக தொடர்ச்சியாக ஆட்சிபீடத்தில் இருக்கும் ஐ. தே. கட்சி அரசாங்கம், இந்தத் தவிறகுப் பெரும் அழிவுகளையும் சமூக-பொருளாதார பின்னடைவுகளையுமே பெற்றுக்கொடுத்துள்ளது என்ற உண்மை, இப்போது சிங்கள மக்கள் மத்தியிலும் ஏற்படத் தொடங்கியுள்ளது. குறிப்பாக இனப்பிரச்சினையை ஐ. தே. கட்சி தீர்க்கத்தவறியதால் தீவிரமடைந்த இந்தப்போர், சிங்கள மக்களது வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் பெருமளவு பாதித்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் சமூகநலத் திட்டங்களை நிறுத்திவிட்டு,அப்பணத்தைப் போரில் செலவிட்டுமகூட, அரசினால் போரை வெல்லமுடியவில்லை. அத்துடன் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களும் பலியிடப்பட்டுவிட்டனர். இதனால் போர்மீதும் - இனப்பிரச்சினை தொடர்பான அரசின் அணுகுமுறை மீதும் சிங்கள மக்கள் வெறுப்படைந்துள்ளனர்.

ஐ. தே. கட்சி அரசு மீதான இந்த வெறுப்பை - கோபத்தை தென்மாகாண சபைத் தேர்தலில் சிங்கள மக்கள் நிரூபித்துவிட்டனர். தென்மாகாண சபைத தேர்தலில் ஐ. தே. கட்சி அடைந்த தோல்வியைத் தொடர்ந்து, இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையில் மாற்றத்தைச் செய்யும்படி அரசுமீது நிர்ப்பந்தம் செலுத்தப்பட்டபோதும், போரைத் தொடர்வதென்றே விஜேதுங்கா அரசு முடிவெடுத்துள்ளது.

சிங்கள அரசு போர்வழியையே தொடர்ந்தும் நாடிநிற்பதற்குப் பல காரணிகள் உண்டு.

புலிகள் இயக்கம் பெற்றுள்ள இராணுவ மேல்நிலை அதில் முக்கியபங்கு வகிக்கின்றது.

குறிப்பாக, கடந்த ஆண்டு (1993) புலிகள் அடுத்தடுத்துப் பெற்றுக்கொண்ட தொடர் இராணுவ வெற்றிகள், புலிகளின் இராணுவ பலத்தை உயர்நிலைக்கு எடுத்துச் சென்றன. பூநகரி கூட்டுத்தள அழிப்பு வெளிப்படையாகவே புலிகளின் பலத்தை உலகிற்கு உணர்த்தியது. அத்துடன் பூநகரிப் பெருவெற்றியுடன் யாழ். குடாநாடு மீதான அரசின் முற்றுகைப் போர்முறையும் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ போராட்ட வரலாற்றில நிரந்தர இடத்தைப் பிடித்துவிட்ட பூநகரி இராணுவ வெற்றியுடன் புலிகள் இயக்கத்தின் இராணுவ - அரசியல்பலம், என்றுமில்லாதவகையில் உயர்நிலைக்குச் சென்றுள்ளது.

புலிகள் இயக்கம் இராணுவபலத்துடன் இருக்கும்போது பேச்சுவார்த்தைகளை நடாத்துவது தமிழினத்திற்குச் சாதகமாக அமைந்துவிடும் என்றொரு அச்சம், அரசிடம் உண்டு. இதே வேளை இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பாக புலிகள் சில அடிப்படைக் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றனர். தமிழரின் தாயகப் பகுதியாக வட - கிழக்கை அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பது அதில் ஒன்று. ஆனால் இந்தக் கோரிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூட அரசு தயாரில்லை. புலிகள் பலமான நிலையில் இருக்கும்போது பேசப் போனால், இந்தக் கோரிக்கைகள்பற்றிப் பேச வேண்டிய தர்மசங்கட நிலைக்கு அரசு ஆளாகிவிடும். எனவே புலிகள் பலமான நிலையில் இருக்கும்போது பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லாது. அவர்களை இராணுவ ரீதியாக பலவீனப் படுத்திவிட்டே பேச்சுக்குப் போகவேண்டும் என்று அரசு விரும்புகின்றது.

இத்துடன் சிங்கள இராணுவத் தளபதிகளும் சமாதானப் பேச்சுக்களை விரும்பவில்லை. சமாதான முயற்சி இராணுவத்திற்குப் பாதகமான விளைவுகளைக் கொடுக்கும் என்பது அவர்களது வாதம். பூநகரித்தோல்வியுடன் படையினர் குழப்பநிலையில் உள்ளனர்; அவர்களது போரிடும் உறுதி - போர் ஆர்வம் பெருமளவு பாதிககப்பட்டுவிட்டது. இதனால் இராணுவத்தினர் மனத்தளர்ச்சியடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் இந்த நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தி போரை நிறுத்துவது, மேலும் படையினரது மன வீழ்ச்சிக்குக் காரணியாக அமைந்துவிடும். ஆகவே இராணுவத்தை மீண்டும் தட்டிநிறுத்தி உற்சாகமூட்ட ஒரு பெரும்போர் சிங்களத் தளபதிகளுக்குத் தேவைப்படுகின்றது.

அத்துடன் புலிகளை அழித்து இறுதி வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை, இன்னமும் சிங்களத் தளபதிகளிடம் குடிகொண்டிருக்கின்றது. இதுவரைநாளும் போரில் இறுதிவெற்றி காணமுடியாமைக்கு நவீன போர்த்தளபாடப் பற்றாக்குறைதான் காரணம் என்பது, அவர்களது கருத்து தாம் கோரிய போர்த்தளபாடங்களை அரசு கொள்வனவு செய்து தருமானால், ஒரு குறித்த தவணைக்குள் புலிகளை அழித்துப் போரை வென்று காட்டுவோம் என்று, சிங்களத் தளபதிகள் ஜம்பம் அடித்துள்ளனர். இராணுவத் தளபதிகளது விருப்பத்தைப் பூர்த்திசெய்து போரை வெல்வதில், விஜேதுங்கா பேராவலுடன் உள்ளார். இன்னும் சில நாட்களில் சிங்களத் தளபதிகள் கோரிய போர் ஆயுதங்கள் கொழும்பு வந்துவிடும். அதற்குரிய முயற்சிகளை ஏற்கெனவே பாதுகாப்பமைச்சு எடுத்துவிட்டது

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிங்கள தேசத்து அரசியலின் போக்கை நிர்ணயிக்கும் பேரினவாத சக்திகளும், சிங்களப் பத்திரிகை உலகமும், பௌத்தமதபீடமும் சமாதான முயற்சிகளை விரும்பவில்லை. இது விஜேதுங்கா அரசுக்கு சார்பானதும் - அதே நேரம் அதற்கு உற்சாகம் கொடுக்கும் விடயமுமாகும்.

டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்தவரை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது வெல்லவேண்டும் என்பதுதான் அவரது பிரதான குறி. இதற்கு போர் அரசியலே வசதியானதும் - சுலபமானதும் என்பது அவரது நிலைப்பாடு. இவ்விதம் பல்வேறு காரணங்களுக்காகச் சமாதானப் பேச்சுக்களுக்கான கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டு, விஜேதுங்கா போருக்கு ஆயத்தப் படுத்துகின்றார். சுருக்கமாகச் சொன்னால் இவ்வருடஇறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்குமுன் ஒரு பெரிய இராணுவ வெற்றியைப் பெற்றுவிட்டு, அதை மூலதனமாகக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கும் ஆசையுடன் விஜேதுங்கா இருக்கின்றார்.

விஜேதுங்காவின் எதிர்பார்ப்பும் - நம்பிக்கையும் எப்படியிருந்த பொழுதிலும், நடைபெறப் போகும் பாரிய படையெடுப்பின் முடிவில்தான் விஜேதுங்காவின் அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது.

கடைசிப் பணயப் பொருளாக திரௌபதையை வைத்து தருமன் ஆடிய சூதைப்போல, நடைபெற இருக்கும் படையெடுப்பு விஜேதுங்காவுக்கு அமையும் என்பது உறுதி.

வென்றால் நாடு: தோற்றால் காடு (வீடு). ○

## அன்றும் இன்றும்!

*சுவர்ச் சித்திரங்கள் புதிதல்ல.*

*'சுவர் இருந்தால்தான் சித்திரம்' என்பது பழமொழி.*

*ஆனால் சித்திரங்கள் சினிமா 'நோட்டிஸ்' ஆகி சுவரில் ஒட்டப்பட்ட காலத்தில், அதனுடன் இன்னொரு 'கலை'யும் வளர்ந்தது!*

*அது, விரும்பாத சினிமா நடிகரின் படத்தின்மேல் சேறு அல்லது சாணகம் அடிப்பது!*

*இன்று?*

*சிறிய படம். வீட்டு வெளிப்படலையருகில் சிறு பந்தல் அமைத்து. அதனுள் இப்படம் வைக்கப்படுகிறது. தீபம் ஏற்றப்படுகிறது. பூக்கள் சொரியப்படுகின்றன.*

*செய்பவர் யார்?*

*இளம் மாணவர், சின்னஞ்சிறு பிள்ளைகள்.*

*வைக்கப்படும் படம் தியாகி திலீபன், அன்னை பூபதி, மற்றும் மாவீரரின் படமாயிருக்கும். இவ்விதம் நாட்டுப்பற்று - உயர்ந்து ஓங்கி வாழ்கிறது!*

*தாத்தா இதை மனம் குளிர்ந்து பார்க்கிறார்; வியந்து மகிழ்கிறார்.*

(உண்மை நிகழ்விலிருந்து) ○

## காஷ்மீர் குண்டுக்குப் பலியான இந்திய இராணுவ புலனாய்வுத் தலைவர் மேஜர் ஜெனரல் பேர்ணான்டஸ்

இந்தியாவில் சிக்கலுக்குரிய மாநிலங்களில் ஒன்றான காஷ்மீரில் உள்ள இராணுவ ஆயுதக் கிடங்கு ஒன்றில் இந்தமாத முற்பகுதியில் வெடித்த குண்டு, இந்திய இராணுவப் புலனாய்வுத்துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் பெர்னாண்டசினது உயிரைப் பலிகொண்டுவிட்டது. இவருடன் பத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புக்குரிய காரணி என்ன என்பது இதுவரை தெளிவாகவில்லை. தாமே இந்த 'நேரக்குண்டை' வைத்ததாக, காஷ்மீரிய போராளி இயக்கங்கள் இரண்டு தனித்தனியாக உரிமைகோரியுள்ளன. அதேவேளை பஞ்சாப் மாகாணத்தின் போராளி இயக்கங்களில் ஒன்றான' காலிஸ்தான் கொமாண்டோஸ்' என்ற இயக்கம், ''தன்னைத்தானே அழித்துக்கொண்டு தியாகியாகிவிட்ட ஒரு இந்திய இராணுவ அதிகாரியினாலேயே அந்தக்குண்டு வெடிக்கப்பட்டது'' என அறிவித்துள்ளது.

இவை எல்லாவற்றையும் மறுத்துள்ள இந்திய அரசு, அதை ஒரு விபத்து என வர்ணிக்கிறது. தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலக்கண்ணி ஒன்றை இந்திய அதிகாரி ஒருவர் பரிசோதித்துக்கொண்டிருந்தபோது, அது வெடித்தமையாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என்கிறது. இந்திய அரசு.



உண்மை எதுவாக இருப்பினும், மேஜர் ஜெனரல் பெர்னாண்டசினது இழப்பு இந்திய இராணுவத்துக்கு ஒரு பேரிழப்பு என்கிறது 'ரைம்' சஞ்சிகை. இவர் மிக அண்மையில் தான் இராணுவ புலனாய்வுத்துறையின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தியப் படைகள் நடாத்திய எல்லைப் போர்களிலும், புலிகளுடனான போரிலும், மற்றும் உள்நாட்டில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க இந்தியப் படைகள் நடாத்திய பல இராணுவ நடவடிக்கைகளிலும், பெர்னாண்டசினது பங்கு முக்கியமானதாக இருந்தது.

1962ஆம் ஆண்டு நடந்த சீன - இந்தியப் போரிலும், 1987 தொடக்கம் 1989வரை நடந்த இந்திய - புலிகள் போரிலும், 1965 மற்றும் 1971 ஆகிய ஆண்டுகளில் நடந்த இந்திய-பாகிஸ்தான் போர்களிலும் இந்தியப் படை சார்பில் பெர்னாண்டஸ் தீவிர பங்காற்றினார். அத்துடன் பஞ்சாப், அசாம் போன்ற இந்திய மாநிலங்களில் நடந்த ஆயுதக் கிளர்ச்சிகளை ஒடுக்குவதிலும் தீவிர பங்காற்றியிருந்தார் (இந்திய - புலிகள் போரின்போது இவர் பிரிகேடியர் நிலையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது).

கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்த இந்த ஜெனரல் காஷ்மீருக்கு இரகசிய பயணம் ஒன்றைச் செய்திருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக 'ரைம்' சஞ்சிகை கூறுகின்றது. ○

# வேண்டுவது ஒன்று!

காலவெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது.

பலதையும் அள்ளி உருட்டியபடி அது ஓடிக்கொண்டிருந்தது!

காலப் பெருவெள்ளம்!

மனித சமுதாயங்கள், தேசங்கள் எல்லாம் அதில் உருண்டோடிக்கொண்டிருந்தன!

இவற்றைப் பார்த்தும் பார்க்காததைப் போல வானம் அமைதியாயிருந்தது. முகில்கள் நின்றும் அசைந்தும் நகர்ந்தும்கொண்டிருந்தன.

இரவு தோன்றுவதற்கு முன்னதாக பறவையொன்று தன் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருப்பது தெரிந்தது.

இதற்கு முன் வந்துவிட்ட இன்னும் சில இனங்கள் அந்த உச்ச மரக்கொப்புகளில் அமர்ந்து குரல் தந்துகொண்டிருந்தன.

கால வெள்ளம் ஓடுகிறது.

இன்று அங்கு மரங்கள் இல்லை.

ஓலை வீடுகள், வயல்கள். பின்னர் ஓட்டுக் குடிமனைகள். அதன் பின்னர் அவையும் தீக்கிரையாகி-

பரந்த வெளியொன்று தெரிகிறது.

தமிழர் இந்த வாழ்விடத்தை இழந்து இடம் பெயர்ந்து விட்டனர்.

எங்கு?

அகதி முகாமில் இடித்து நெருங்கி நலிந்து, நோயும் சொறி சிரங்கும் கொண்டு தம் குழந்தைகளுடன் நிற்கின்றனர் - 'அகதி முகாம்' என்ற பெயர்கொண்ட அடைப்பில்!

காலம் செய்யும் கோலம் தெரிந்தது. அதனை வைது திட்டாது இருக்க முடியவில்லை!

ஆனால் அது ஓடிக்கொண்டிருந்தது.

வானம் மேலே நின்று சிரிப்பது தெரிந்தது!

'' மனிதரைப் பார் '' என்றது அதே வானம்.

எனக்கு எம் அகதி முகாம்கள் மீண்டும் தெரிந்தன. இங்கும் பிறநாட்டிலும் அகதிகளாய் நிற்கும் எம்மவர் தெரிந்தனர்.

'' உன்னை மட்டுமல்ல! பிற மனிதரையும் பார்! பிற நாடுகளையும் பார்! '' என அதட்டிற்று அது.

'' அதோ! ' என அதன் குரல் மீண்டும் கேட்டது.

அங்கு சந்திர மண்டலம் தெரிந்தது. அதில் ஒரு மனித சின்னம் ஒளிர்வதும் தெரிந்தது!

அங்கு 1969 யூலை என்ற தேதியும் நீல் ஆம்ஸ்ரோங் உட்பட மூவரின் பெயர்களும் என் கண்ணுக்குத் தெரிந்தன.

'' அவ்வளவுதானா? '' என ஏளனம் செய்தது வானம்!

உற்றுப் பார்த்தேன். தங்கள் பெயருடன் தங்கள் நாட்டின் பெயரையும் அவர்கள் பதித்திருப்பதைக் கண்டேன்!

'' தம் நாடுதான் அவர்களின் வாழ்வு!

சரி, இன்னும் பார்! '' என அதிர்ந்தது ஒலி.

முன்னைய ' அராபியப் பாலைவனம் ' இன்று எண்ணெய் வள நாடுகளாய்த் தெரிந்தன! அதில் சவூதி, யேமன், ஓமான், குவைத், துபாய் எல்லாம் தெரிந்தன! அங்கும் எம்மவர் கூலிதேடிப் போவதே தெரிந்தது.

'' இன்னும் அகலப் பார்!''

முன்பு 'இருண்ட கண்டம்' என அழைக்கப்பட்ட ஆபிரிக்கா தெரிந்தது!

இன்று 1950 ஆம் ஆண்டின் பின், போர்க்கொடியும் பட்டொளியும் பறக்கும் புத்தம் புது நாடுகள் பல, அந்த ஆபிரிக்கக் கண்டத்தில் எழுந்து நிற்பது தெரிந்தது!

''இன்னும் பார்!'' எனத் தொடர்ந்தது குரல்.

கால வெள்ளம் பதித்த பல சுவடுகள் தெரிந்தன.

200 வருடத்திற்கு முன்னைய பிரெஞ்சுப் புரட்சி தெரிந்தது.

1776 - பிரித்தானியரிடமிருந்து தன்னை விடுவித்த அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் தெரிந்தது! அதன்பின் அது கண்ட முன்னேற்றம் தெரிந்தது!

இதற்கும் அடிகொடுத்து தன்னைப் போர்மூலம் மீட்பித்த வியட்னாம் தெரிந்தது. யப்பான் தெரிந்தது யேர்மனி தெரிந்தது. மக்கள் சீனா, கியூபா, தெரிந்தன. சோமாலியா தெரிந்தது. கிழக்கு ஆசியக் கண்டம் தெரிந்தது!

'' எதற்கும் மூலவளம் வேண்டும் -

அயராத உழைப்பு வேண்டும் '' என்றது என் மனம்.

'' அவை எதுவும் போதாது ' என்றது ஒலி!

''பின்? ''

'' நின்று நிலைத்து நிமிர்ந்து வாழ ஒரு நிலம் வேண்டும். நீ வாழ வேண்டின், உனது நாடு உனதாக வேண்டும்.

- இதை அடுத்து வருவதே அனைத்தும்!''

நாக. பத்மநாதன்

## போராளியின்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான், எதிரிப்படையை அதற்குள் தப்பும் வழியற்றுச் சிக்கவைத்துத் தாக்கி அழிக்க முடியும். அவ்வளவு நேர்த்தியாக வியூகம் அமைக்க வேண்டுமானால், எதிரியின் நகர்வு பற்றி மிகத் துல்லியமான தகவல்கள் தேவை. படையினரின் தொகை என்ன? ஆயுத - படைக்கல வகைகள் என்னென்ன? படையூர்திகள் மற்றும் வசதிகள் எப்படி? என்ன ஒழுங்குமுறையைக் கையாண்டு எதிரி படை நகர்தது கின்றான்? என்ற தரவுகள் எந்தப் பிசகுமின்றிக் கிடைக்கவேண்டும்.

அவற்றின் அடிப்படையில்தான்- நாம் சிறந்ததொரு வியூகத்தை அமைத்து, நம்பிக்கையோடு காத்திருக்க முடியும்.

புலோப்பளையில் இந்தப் பணியைச் செய்து முடித்தவன் நவநீதன். நாங்கள் காவியம் படைத்த அந்தப் பெருஞ்சமரில், வெற்றி வாகை சூடக்கூடியவாறு, நுட்ப தந்திரோபாயமான போர் வியூகத்தை அமைக்க சரியான தகவல்களைத் தந்தது மட்டுமல்ல - இரவிரவாக நடந்துதிரிந்து சண்டைக்கேற்ற ' நிலை இடம் ' தேடுவதில் நவநீதன் தளபதிகளுக்கு உதவினான்.

எல்லா ஏற்பாடுகளும் முடிந்த பின்பும், மீண்டும் முன்னுக்கே சென்று இறுதிவரை எதிரியின் நகர்வுகளைப்பற்றிய தகவல்களைத் தந்துகொண்டிருந்தவனுக்கு, சண்டை துவங்கியவுடன் பின்னுக்கு வந்துவிடுமாறுதான் சொல்லப்பட்டது. ஆனால், உரிய இடத்திற்குள் எதிரியின் படையணி வர, எமது முதலணியோடு களத்திலிறங்கிச் சமரை ஆரம்பித்தது அவன்தான்.

அடுத்ததுதான் பூநகரிச் சமர்- புலிகள் இயக்கத்தின் போரிடும் சக்தியைப்பற்றி சர்வதேச செய்தி அலைவரிசைகளையெல்லாம் வியந்துரைக்கவைத்த செருக்களம்.

அவலப்பட்ட மக்களுக்குப் பாதை திறக்கக் கேட்டபோது - அரசியல் பேரம்பேசி அகங்காரம் செய்தோர்க்கு உச்சந்தலையடி கொடுத்த போர் அரங்கு.

அந்தக் கூட்டுத்தளத்தின், 'வில்லடி' கட்டளை முகாமைத் தாக்கும் பெரும் படையணிக்குள், உப குழுவொன்றுக்கு நவநீதன் தளபதி. ஒதுக்கப்பட்ட ஒரு காவலரண் தொகுதியைத் தாக்கி அழித்தபின், முகாமின் மையத்தைத் தாக்கும் பிரதான படைப்பிரிவுக்குத் துணைக்குழுவாக இறங்கவேண்டுமென்பதுதான், அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி.

'வில்லடி' முகாம்தான், கூட்டுத்தளத்தின் கட்டளை முகாம். அது மிகப் பலமானது. 91ஆம் ஆண்டு ஆனையிறவுத்தளத்தை நாம்வெற்றிகொள்ள முற்பட்டபோது அது இருந்ததைப்போல, ஏறக்குறைய அதேயளவு பலத்துடன்தான் இது இருந்தது.

நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னர் சண்டை ஆரம்பித்தது. விடிந்த போது நவநீதனுக்கான காவலரண் தொகுதி தாக்கியழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் கட்டளை முகாமில், 'ராங்க்'குகளையும், பெருந்தொகை ஆயுதங்களையும் இழந்த எதிரி, சிறு பகுதியொன்றில் எஞ்சியிருந்தான்.

அர்த்தசாம இருளில் சிதறியோடிப்போன சிப்பாய்களும், விடிந்த பின் கட்டளை முகாமை நோக்கி ஓடிவர, திடீரென எதிரி அசுர பலம் பெற்றான்.

எதிரி, 'அடுக்குமுறைப்பாதுகாப்பு முறையில்' (Depth Defence System) ஒன்றன்பின் ஒன்றாக அமைத்திருந்த காவலரண்களைத் தகர்த்தெறிந்து கொண்டு, ' கனரக மோட்டார் பீரங்கி' உள்ள தளத்தை நோக்கி முன்னேறியஎமதணி அதனைக்கைப் பற்றும்போது, அணி பெருமளவில் சேதப்பட்டுவிட்டது; பொழுதும் விடிந்துவிட்டது.

அந்த நேரத்திலேயே - துணைக் குழுக்களை அழைத்து பீரங்கிகளை அப்புறப்படுத்த முன்னர் - எதிரி புதுப்பலம் கொண்டு கடுமையாகத் தாக்கத் துவங்கினான்.

பீரங்கித் தளம் வெளியான தரையமைப்பைக்கொண்டது. முற்றாக அவனுக்குச் சாதகமான களம். அத்தோடு, திட்டமிட்ட ரீதியில் அமைக்கப்பட்ட சக்திமிக்க அரண்களிலிருந்து எதிரி தாக்கி முன்னேறினான்; விடிந்துவேறுவிட்டது. வானூர்திகள் பார்த்துப்பார்த்துக் குண்டடித்தன. இரவுச் சண்டையிலேயே மிகுந்தளவில் பல வீனப்பட்டுப்போன எமதணி, இயலுமானவரை போரிட்டது; பீரங்கிகளை விடக்கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் போரிட்டது. ஆனால், ஏறக்குறைய அது முற்றாகவே சேதப்பட்டு விட்ட நிலையில், பீரங்கிகளை மீட்க முடியாமலே பின்வாங்க நேரிட்டது.

கைப்பற்றப்பட்ட பீரங்கித் தளமும், பீரங்கிகளும் கைவிடப்பட்டுவிட்டன. இப்போது பீரங்கித் தளம் நடுவில். அதன் பின்னால் எதிரிப் படை; முன்னால் புலிகள் படை. பீரங்கிகள் அநாதரவாகக் கிடந்தன - அவனுக்குப் பக்கத்தில், எங்களுக்கு எட்டத்தில்.

திரும்பவும் தாக்கி அவற்றைக் கைப்பற்றியே ஆகவேண்டும். ஆனால் பகலில்......? அது முற்று முழுதாகவே பகைவனுக்குச் சாதகமான சூழ்நிலை. பெரும் இழப்பைக் கொடுத்து, மிகுந்த சிரமத்துடனேயே நாம் மோதவேண்டியிருக்கும். அப்படியானால் இரவு .....? இல்லை: இருளும்வரை காத்திருக்க முடியாது. எதிரி மீண்டும் சுதாகரித்து, முழுப்பலத்தையும் திரட்டி முன்னேறி, பீரங்கிகளைத் திரும்பக் கைப்பற்றிவிடக் கூடும். அதனால், அவனுக்கு அவகாசம் கொடுக்காமல் உடனடியாகத் தாக்குதலை நடாத்தவேண்டும்.

இது ஒரு சிக்கல் நிறைந்த களநிலைமை இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நவநீதன் அழைக்கப்பட்டான்; அவன்தான் அதற்கு உரித்தானவன்.

தேர்ந்தெடுத்த வீரர்களைக் கொண்டு உடனடியாக ஒரு தாக்குதலணி தயார் செய்யப்பட்டது. அந்த அணியின் கொமாண்டராகி சண்டையைத் துவக்கினான் தளபதி.

முரட்டுத்தனமான முன்னேற்றம். அது அவனுக்குப் பழக்கப்பட்ட வேகம். 'பீரங்கிகள்' - என்ற ஒரே உறுதியுடன் பாய்ந்தனர் வேங்கைகள். நிலைமையைப் புரிந்துகொண்ட எதிரி பலம்கொண்ட மட்டும் மோதினான்; தாக்குதலை முறியடிக்க தன் சக்திக்கு மீறிச் சண்டையிட்டான்.

இருந்தபோதும் -

பீரங்கிகளை அடையும்வரை நவநீதன் சண்டையை நடாத்திச் சென்றான்.

எதிரியின் வெறித்தனமான தாக்குதலுக்கு மத்தியிலும் தளத்தைக் கைப்பற்றினர் புலிகள்.

பீரங்கிகள் இரண்டு.

முதலாவதைக் கழற்றி எடுத்துப் பின்னுக்கு அனுப்பிவிட்டபோது - உற்சாகம் பொங்கியது.

நெருப்பு மழைக்குள்ளும் இரண்டாவதைக் கழற்றிக்கொண்டிருக்கும்போதுதான்...... அந்தத் துயரம் நடந்தது!

எங்கள் கதாநாயகனுக்குப் பக்கத்தில்..... மிக அருகில்......எதிரி ஏவிய மோட்டார் குண்டொன்று விழுந்து வெடித்தது ...... அவனை...... ஓ! அதை எப்படிச் சொல்ல......?

எங்கள் கண்களுக்கு முன்னாலேயே, எங்கள் நெஞ்சினிய நண்பன்...... கை...... கால்...... இடுப்பு ......நெஞ்சு ...... முகம் ...... எல்லாமே பிய்ந்துபோய்...... தசைகள் தொங்கி...... இறைச்சியாய்...... ஓ! அதை எப்படி விபரிக்க......

இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்துகொண்டும் எங்கள் நவநீதன் கத்தினான்...... ''மோட்டரை எடுங்கோடா ...'', ''மோட்டரை விடாதேங்கோடா ...''

உயிரின் கடைத்துளி சிந்தும் போதும், சத்தமில்லாமல் அவனது வாய் அசைந்துகொண்டேயிருந்தது .. அது '' மோட்டரை விடாதேங்கோடா......'' என்ற கட்டளையாகத்தான் இருந்திருக்கும்!

அவன் சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

நாங்கள் விடவில்லை.

கொண்டுதான் வந்தோம்! ○

## வெளிநாடு...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியை நாடியுள்ளது. திருப்பியனுப்பப்படும் பணியை இந்த சர்வதேச நிறுவனமே கண்காணிக்க இருக்கின்றது என, சுவிஸ் அரசின் செய்திகள் தெரிவிக்கின்றன. இது உண்மையில் ஐரோப்பாக் கண்டம் முழுவதினதும் ஆசியுடன் சுவிஸ் அரசு மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கைதான். அதாவது, சுவிஸ் அரசைத் தொடர்ந்து மற்றைய ஐரோப்பிய அரசுகளும் ஈழத்தமிழர்களை வெளியேற்றும் பணியை ஆரம்பிக்கலாம் என, அவதானிகள் தெரிவிக்கின்றனர். இப்போதே பல ஐரோப்பிய நாடுகளில், சட்ட விரோதமாகப் புகுந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில், பல்லாயிரம் தமிழர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, ஐரோப்பிய நாடுகளுக்குள் புகுவதற்கென 5000 ஈழத்தமிழர்கள் மொஸ்கோவில் காத்திருக்கின்றனர் என்றும், நம்பகரமான செய்திகள் கூறுகின்றன. முதலில் இத்தகையோர் நாடுகடத்தப்படலாம் என்றும், பின்னர் படிப்படியாக தாயகம் திருப்பியனுப்பப்படும் பணிகள் நடபெறலாம் என்றும் ஊகிக்கப்படுகின்றது.

இவ்விதம் அரசுகளினால் சட்டபூர்வமாகத் திருப்பியனுப்பப்படும் பணி நடைபெறும் அதேவேளை, சில சட்டவிரோதக் குழுக்கள் வெளிநாட்டவர்கள்மீது பயங்கரவாதங்களைப் புரிந்து, அவர்களை அப்புறப்படுத்தவும் முயல்கின்றன.

தமது சேமிப்புகளை விற்றுவந்த பணத்தில் இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவளித்து, பொருள்தேடும் ஆர்வத்துடன் மேலை நாடுகளுக்குச் சென்ற தமிழர்களையும் அவர்களது குடும்பங்களையும், இந்தச் செய்திகள் துயரப்படுத்தும் என்பது உண்மை.

நிலைமை இப்படியிருக்க, இவை எதையும் கருத்திலெடுக்காது ஒரு அசட்டு நம்பிக்கையில், வெளிநாடுகளுக்கு தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் படையெடுக்க முயல்வது, வெளிநாடுகளின் அரசியல் நிலைமையைப் புரிந்துகொள்ள முயலாத தன்மையையே வெளிக்காட்டுகின்றது. ○

# இது போராடும் பூமி... புலிகளின் காலம்... பிரபாகரன் வழிகாட்டி!

இன்றும் எங்கள் வானத்தில்
வெள்ளிநிலவு பாலை அள்ளித்தான் சொரிகிறது.
விண்மீன்கள் கண் தூங்கவில்லை.

## உலைக்களம்

வியாசன்

இலுப்பைமரம் பூத்துக் கொட்டுகிறது.
ஆழக்கிணறேதும் ஊற்றடைத்துப் போகவில்லை.
குண்டும் குழியுமான பாதையெனிலும்
இன்றும் பயணம் நடக்கிறது.
இது தமிழீழம்.
எல்லாம் நடக்கும்.
விஜேதுங்காவுக்கு ஒரு வினா
உன்னால் முடியுமா தம்பி ?
எங்களுக்கு வித்தே வேண்டாம்.
நாங்கள் வேரிலிருந்தே முளைவிடும் சாதி.
எங்களை கூட்டிக்குவித்து தீயிடு
மறுநாள் சாம்பலிலிருந்து பிறப்போம்.
வெட்டிச் சரித்துப் புதைத்திடு
மூன்றாம் நாள் எங்கள் முகம் தெரியும்.
இது தமிழச்சாதி.
இங்கே
குண்டு சுமந்து வானூர்தி வட்டமிடும்.
குழிகள் தேடி எவரும ஓடுவதில்லை.
போட்டு விட்டு ''புக்காரா'' போகும்.
புழுதியைத் தட்டிவிட்டு
அந்த இடத்திலேயே மீண்டும் பாய்விரிப்போம்.
சிதறிப் போன சுவரின் கற்களை எடுத்தே
அடுப்பு மூட்டி சமையல் தொடங்குவோம்.
விஜேதுங்கா!
என்னடா பொடியா செய்யப் போகிறாய் ?
இது தமிழச் சாதி.
தீக்குளித்தும் தோல்கருகாச் சாதி.
கண்களினால் சுவாசித்து
மூக்கினால் பார்க்கும் வித்தியாசமானவர்கள்.
மலைகள் இல்லையென்று நாங்கள் தளரவில்லை.
ஆறுகளில்லை என்று அந்தரித்துப் போகவில்லை.
ஆழக் கிணறுவெட்டி நீரள்ளிக் குடிக்கின்றோம்.
ஆக மூன்று மாதங்களே இங்கு மழைபொழியும்.
என்றாலும் பச்சை நிறத்தில் தான்
எங்கள் மண் பாவாடை கட்டியுள்ளது.
இது தமிழச்சாதி
தெருப்புழுதியில் கயிறு திரித்து
தேரிழுக்கும் சாதி.
அப்பு விஜேதுங்கா!
என்னசெய்யும் உத்தேசம்
படைகளை நடத்தி நடகளப் போட்டியா?
நல்லது; நாளை சந்திப்போம்.
வெற்றிக் கம்பத்தைத் தொட்டபின்
வெள்ளிக் கிண்ணத்துடன் பேசுவோம்.
எதிரியை வாவென்று கடிதம் எழுதியாச்சு
தமிழனே! நீ என்ன செய்கின்றாய்.
பூச்செடிகளுக்கு முள்ளும்,
பறவைகளுக்குச் சொண்டும்,
மிருகங்களுக்குக் கொம்பும் ஏன் கொடுக்கப்பட்டது?
போராட வழங்கிய போர்க்கருவிகள் அவை.
'' அழிக்கவருபவனை அழித்துவிடு ''
கீதையின் சாரமே இதுதான்.
நிமிர்ந்து நிற்பவையே நிலைக்கும்.
விழுந்து கிடப்பன யாவும் மிதிக்கப்படும்.
தலைநிமிர்ந்த பனைகளைத் தறிக்கக்கூடாது.
சட்டமே வந்துவிட்டது.
ஆனால்...
முல்லைக்கொடியை மிதிக்கக் கூடாது என்று
ஏன் எவரும் குரலெழுப்பவில்லை?
காலில் விழுந்து கிடப்பவைகளை
எவரும் கணக்கெடுத்துக் கொள்வதில்லை.
அதனால் தான்.
மனிதர்களுக்கும் இது பொருந்தும்.
தமிழனே!
மணிமுடிதரித்த உன் தலையில்
வெய்யிலுக்குத் தொப்பி போடவும் வெட்கப்படுகின்றாய்.
ஏழுகுதிரைகள் பூட்டிய தேரில் உலாவந்தவனே!
அச்சுமுறிந்த சைக்கிள்தானும் உன்னிடம் இல்லையா?
ஊருக்கெல்லாம் துணி நெய்து கொடுத்தவனே!
கோமணத்துண்டுக்கும் வழியற்றுப் போனாயா?
வாழும் வழிகள் ஆயிரம் சொன்னவனே!
ஆளும் உரிமையை மட்டும் யாரிடம் கொடுத்தாய்.
கொம்பும், முரசும், பேரிகையும் எங்கே?
கவசமும், வேலும், கைவாளும் எங்கே?
இவற்றையெல்லாம் எறிந்து விட்டு
அன்னதாமடத்தில் என்னடா செய்கிறாய்?
இந்தமண்ணில் உனக்கொரு வரலாறு வேண்டும்.
இருந்தாய், வாழ்ந்தாய் என்பதற்கு
அடையாளம் வேண்டும்.
உன் தலைமுறைக்கு ஒரு சரித்திரம் இருக்கட்டும்.
உயிர் என்ன உயிர்
அதைக் காட்டு பார்க்கலாம்.
உருவமற்ற ஒன்றுக்காக ஏன் அச்சப்படுகின்றாய்.
எத்தனை காலம் வாழ்ந்தாய் என்பதில்
பெருமை கிடையாது.
எப்படி வாழ்ந்தாய் என்பதே மகிமைக்குரியது.
குறவணன் புழுவும், கும்புடுபூச்சியும் கூட
பூமியிலதான் வாழ்கின்றன.
யார்தான் கணக்கில் எடுத்தார்கள்?
போருக்கு வாவென்று
எதிரிக்குக் கடிதம் போட்டாச்சு.
நீ புறப்படு.
பீளைசாறிய கண்களைத் திறந்துபார்.
பாயைச் சுருட்டி அசைவிலே போடு.
தாயிடம் விடை பெறு.
உன் தங்கை எங்கே?
உனக்குமுன் அவள் களத்துக்குப் போய்விட்டாள்.
வெளியே பார் வெய்யில் அடிக்கிறது.
இது போராடும் பூமி......
புலிகளின் காலம்......
பிரபாகரன் வழிகாட்டி!